[illegible]

V4 No. 23 11 June 1931

JL
ஸ211, N28KN
M31·4·23
188921

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஜூன் ௴ 11௨ [No. 23.

30JUN 1931

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 441 |
| 2. | அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. | 443 |
| 3. | சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம்-114—120) K. இராமரத்நம் ஐயர் B.A. | 445 |
| 4. | நவராத்திரி — ஓர் நாடகம் K. N சுந்தரேசன் B. A. (Hons) | 448 |
| 5. | கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. | 451 |
| 6. | யாப்பிலக்கணம் (தொடை -இயைபு) | 453 |
| 7. | விசிறி — (Fans, by Joseph Addison) K. இராஜகோபாலன் | 455 |
| 8. | மதிப்புரை. (திரு அருட்பா) | 459 |
| 9. | வர்த்தமானம். | 459 |


## கலாநிலயம்

### மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4.

18892

உவமையின் நலத்தினால் அரியதொரு கருத்தின் நுண்மையை நிலைகாட்டிய திறமைக்கு எல்லை இதுவென இலக்கியவுலகத்தில் திகழ்கின்றது,

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்

என்னுங் குறள். மேற்பார்வைக்கு முற்றிலும் ஒன்றே போல் தோன்றி, மற்று, உண்மையை நோக்குங்கால் நேர் மாறாக நிற்கின்ற இரகசியம், மக்களுக்கும் கயவருக்கும் இடையே நிகழ்வதுபோல் வேறெத்திறத்திலும் நிகழ்வதில்லை. இதனால்,கயவர்களை மக்களினத்தினின்றே பிடர்பிடித்துந்தித் துரத்துவதுமன்றி, இனமல்லா இரண்டை ஓரினம்போல்மயக்குகின்றவெள்ளை மதியின் நொய்ம்மையும் நுவலப்படுகின்றது. சென்ற நாள் நாம், இயற்கையாயிருக்கின்ற பெருமையோடு, செயற்கையாலுஞ் சேராத உரிமையைத் தலைமயங்கித் தடுமாறுமொரு மானுடத் தன்மையைச் செப்பினோம். அதற்கிணங்கும்படி, மேற்குறித்த திருவள்ளுவர் வாசகத்தை அநுசரித்து,

பெருமையே போலும் உரிமை அவையன்ன
ஒப்பவைதாம் யாங்கண்ட தில்

என அமைத்துக்கொள்வது சாலப் பொருந்தும் என நினைக்கின்றோம். மக்கள் போல்வராயினும் மக்களே அல்லாத கயவருக்கு நிகராக, பெருமைபோல்கின்ற இவ்வுரிமை அப்பெருமையோ எள்ளளவும் ஆகாத தொன்றாம்.

மனிதனுக்கிருக்கின்ற பெருமையையும், அவன் எய்துதற்கு வெஃகுகின்ற உரிமையையும் ஒப்பு நோக்கிக் கருதுங்கால் எள்ளிச் சிறிது நாம் சிரிக்கவே வேண்டி வருகின்றது. மானுடமரபின் மாண்புதான் கரைகாணற் பாலதன்று. மேனாள், புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்கபெருந்தகை சிபிசக்ரவர்த்தியும் மனிதனே. ஆவின்கன்றிற் கீடாகத் தன்னொரு மைந்தனை முறைசெய்த அச்சோழமன்னனும் மனிதனே. முடியுடைத் தன் சிரத்தில் காரணமொன்றுமின்றியேயும் உதைத்த கோசிகமுனிவனது தாளினைத் தன் கோக்கரங்களால் வருடி 'நொந்துதோ பாதம் நொந்துதோ' வென உபசரித்த அரிச்சந்திரனும் மனிதனே. விற்றெடுத்துக்கொள்ளுமாறு ஒரு பாவலனுக்குத் தன் சிரத்தினை நீட்டிய குமணனும் மனிதனே. தொண்டுசெய்து நாளாறிற் கண்ணிடந் தப்பவல்ல திண்ணனாரும் மனிதனே. தில்லையின் எல்லைநின்று எம்பெருமானைத் தொழுதுவந்த நந்தனும் மனிதனே. புகல்வது புராணமென்பது மறந்து கரதூடணர்க்கெதிராய் இராமபிரானுக்குப் படைத்துணைகொண்டெழுந்த குலசேகரப்பெருமானும் மனிதனே. புறவொழுக்கம் புரிந்துமீண்ட நாயகற்குத்தன் காற்சிலம்பை உதவநேர்ந்த கண்ணகியும், கணிகையேனும் காதலின் இரதமேயாய மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் மானுடப் பிறவிகளே. அடைமொழி அனைத்துங்கடந்த கம்பரும் வள்ளுவரும் மனிதர்களே. இயேசுகிறிஸ்துநாதர், தெய்வமேனும், தன்னைக் கழுமரத்தில் அறைந்துகொண்டிருந்த கயமைமிகு தீயோரைக்குறித்து, "பிதாவே, இவர்களை மன்னித்தருள்க, ஏனெனில் அவர்கள் என்னசெய்கின்றார்க ளென்று அவர்களே அறியார்" என்று பரிவுடன் வேண்டிச் சொல்வதற்கு மனிதனாகவே பிறந்தார். இரவில் நாகசேர்தனக்குச் சென்றிருந்த மன்னவனது வாயு

18892
NB1423

நோக்கி அவனது மெய்ந்நட்புடைய புலவன் பள்ளியறையில் மஞ்சத்தயர்ந்து உறங்கிவிடுதலும், பின்னரங்கெய்திய அரசி, இருளின் மருட்சியால் அவனருகு சயனஞ் செய்திருக்க, மீண்டுவந்து இதனைக்கண்டும் அவ்வியங்கொள்ளாது, "நண்ப, எனக்குஞ் சற்றே இக்கட்டிலில் இடங்கொடு" என்று அப்புலவனைவேண்டிய அரசவள்ளலும் மனிதனே. மற்று, பழிபடுமவ்வயர்ச்சிக்கு அஞ்சி அந்நாட்டை விட்டோடி நெடுநாட்கழிந்து மீண்டபோது, தன் இன்னுயிரனையமன்னவன் இறந்து சுடலையில் அவ்வேளை எரிந்துகொண்டிருந்தனன் என்பது கேள்வியுற்று உளைந்தமனத்தினனாய் புறங்காட்டிற்கு விரையச்சென்று, "அன்று என்னைக்கட்டிலில் இடங்கேட்ட மன்னனோ, இன்றெனக்குக் கட்டையில் இடந்தா" வென அவ் வீமத்தீயி னுடனேறி மாய்ந்த அப்புலவனும் மனிதனே. "மன்னுயிரோம்பும் இம் மாபெரும் பாத்திரம் என்னுயி ரோம்புதல் யானே பொறேன்," என்று வேண்டியதளிக்கும் தெய்வக் கடினைப இலஞ்சியுள் எறிந்து பசியாற்செத்த ஆபுத்திரனும் மனிதனே. இன்னவரன்ன எத்தனையோபலர் தாங்கித்திகழ்ந்த ஓர் உருவமுடைய மாநுட இனத்தைச் சேர்ந்தவர் நாமென்னில் நம்முடைய பெருமைக் கெல்லாம் இதுவொன்றே போதாதோ. இனத்தின் மரபினால் வரும் இப்பெருமையேயன்றி மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தன்வரையிலே உள்ள தனித்த பெருமைக்குமோ அளவில்லை. வலம்செய்யக் கால்களுண்டு, வணங்கற்குத் தலையுண்டு, தொழுதற்குக் கைகளுண்டு, துதித்தற்கு நாவுளது, நினைப்பதற்கு மனமுளது, மனிதனுடைய பெருமைக்கு இதன்மேல் வேண்டுவது யாதோ. வலஞ்செய்தேத்தி இவ்வண்ணம் வணங்குதற்கு ஓர் கடவுள் வாய்த்த மாநுடர் இதன்மேல் மற்றோர் பெருமை எதனிற் பெறுதற்கியலும். சொத்திற்கும் சுதந்தரத்திற்கும் மணவினைக்கும் 'ஓட்டிற்கும்' உரிமை உடைமையிலா! கம்பராமாயணக் கட்டுரை யொன்றில் (வால்யூம்,4-இதழ் 234). ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர்,

> "பெருமாளிற் பலபடி பெரியார் அப்பெருமாளின் பக்தர்கள். ஏனெனில், மக்கள் தாம் நினைந்தேத்தித் தொழுதற்கொரு பொருளுளது. எம்பிரானுக்கோ ஏதுமில்லையே. ஆதலால் இவ்வேழை இராமன் தன் திருநாமத்தைத் தானே சாற்றவேண்டியவ னாயினன். இன்று தன் திருவுள்ளத்துள்ளே தன்னையே நினைக்க வேண்டியிருக்கின்றது. ஆயிரம் மௌலியானைக் கைதொழும்பொழுதும், தன் நாமஞ்சாற்றித் தன்னையே நினைந்து தொழுபவனாதலால் தன்னையே தொழுவதல்லால் வேறுநெறி அவனுக்கில்லை. கடவுளொன்றுடைய மனிதர் பெற்றபேறு அக்கடவுளே பெற்றதில்லையெனின் - அரிது அரிது மாநுடராதல் அரிது"

என்றினிது காட்டுவதுபோல் கடவுளுக்கு மில்லாப் பெருமை ஒன்றுடைய இம்மனிதன் மற்றோர் உரிமையெய்திப் பெருமையடைய வேண்டுமென்பதிலும் பேதைமை பிறிதில்லையே.

மரபினாலும் மனத்தினாலும் கடவுளை வழிபடற்கமைந்த அவயவங்கள் உடைமையாலும் வாய்ந்த பெருமைநலங்க ளன்றியும் மனிதனது ஆன்மாவின் பெருமையைக் கருதினாலும் [illegible] தாய் நிற்கின்றது. காலமும் இடமும்போல் எல்லையற்றதாகி விளங்குகின்றநம் ஆன்மாவிற்குப் பெருமையளிக்க அயலொன்று வேண்டுமோ! வேண்டுமென்று நினைத்தவளவிலே அனைத்தையும் அவலமே யாக்கியதாய் முடியுமே.

ஒரே கருத்தை, பேரறிஞர் இருவர், நேருக்கு நேர் எதிர்முகமான வேறுவேறு காரணங்களால் நிலைநிறுத்துகின்ற நுண்மையை இந்தச் செவ்வியில் ஓதியுணர்ந்தாலூதியமுளது. வேலைக்கேற்ற கூலிஎன்னும் உரிமையின் கொள்கையைக்கருத்துட்கொண்ட ரால்ப் வால்டோ எமர்ஸன் என்பவர், "ஏற்றகூலி எதுவென்பதை நீ அறிய வல்லவ னல்லனாதலால், முற்றுமறிந்த நீதிக்கிடமாகிய இறைவனையே உனக்குக் கடன்காரனாக்கிக் கொள்-மற்றோர் உரிமை உனக்கில்லை, என்றறைந்தவாய்மையை முன்னரிங்கு எடுத்துக்கூறினோம். கடவுளின் மேன்மையில் நாட்டம் வைத்துக் கூறியது அது. மற்று, தாமஸ் கார்லைல் என்னும் அறிஞர், மாநுடப் பெருமையை ஆதாரமாக வைத்து இதே முடிவிற்கு வரும்திறமையை உணர்த்துஞ் சொற்கள் பின் வருமாறு:—

"My brother, the brave man has to give his life away. Give it, I advise thee:—thou dost not expect to sell thy life in an adequate manner? What price, for example, would content thee? The just price of thy life to Thee-Why! God's entire creation to thyself, the whole Universe of Space, the whole Eternity of Time, and what they hold: that is the price, which would content thee; that, and if thou wilt be candid, nothing short of that! It is thy all; and for it thou wouldst have all. Thou art an unreasonable mortal;—or rather thou art a poor *infinite* Mortal, who, in thy narrow clay-prison here, seemest so unreasonable. Thou wilt never sell thy life or any part of thy life in a satisfactory manner. Give it like a royal heart; let the price be *Nothing;* thou hast then—, in a certain sense got all for it! The heroic man - and is not every man, God be thanked, a potential hero?—has to do so, in all times and circumstances. In the most heroic age as in the most unheroic, he will have to say, as Burns said proudly and humbly of his little scottish songs, little dewdrops of Celestial melody in an age when so much was unmelodious, "By Heaven, they shall either be invaluable or of no value; I do not need your guineas for them!" It is an element which should and must, enter deeply into all settlement of wages here below.

[தம்பி, வீரவாழ்க்கையுடைய வொருவன் தன்னுயிரை வழங்கிவிடவேண்டும். கொடையே புரிக: தக்கபடி உன்னுயிரை விற்கவோ எதிர்பார்க்காதே.



எந்தவிலைதான் உனக்குத் திருப்தியாய்த் தோன்றக் கூடும்? உனக்கே உன் ஆயுளிற்கு நியாயமானவிலை—கடவுள் படைப்புப் பொருளனைத்தும் நினக்கே, ஆகாயப் பொருளனைத்தும் நினக்கே, ஆதியந்தமற்ற அலகிலாக் காலமெல்லாம்—இவைகளே உன் உயிருக்குத் தகுந்த விலையென்று நீ திருப்தியடைவாய்; அத்தனையும் வேண்டும். உண்மையைச் சொல். அதனில் ஒரே ஒரு அணுக் குறைந்தாலும் ஒவ்வுவாயோ? ஆம், அவ்வளவும் உனதே! அவ்வளவையும் வேண்டுவாய். இன்னதோர்விலை உனக்கீடாய் எதிர்பார்ப்பது அநியாயமோ- அன்று, அன்று. அலகில்லா நீ இவ் வுடற்சிறையில் அடங்கிக் கிடக்குங்கால், அநியாயவிலை வேண்டுபவன்போல் தோற்றுகின்றாய். உன் உயிர்வாழ்க்கையையேனும், அதனில் ஒரு பகுதியையேனும் உன்மனதிற் கிசைந்தபடி ஒருபோதும் நீ விற்கமாட்டாய். ஆதலால் அதனை வீறுசால் அரச இதயத்தோடு நீ அளித்துவிடு. எதிர்விலை யொன்றும் வேண்டா. அப்பொழுதுதான் ஒருவகையில் அதற்கீடாக எல்லாவற்றையும் நீ பெற்றவனாவாய். வீரபுருடர்—புருடரில் ஒவ்வொருவரும் கடவுளருளால் வேண்டுமெனின் வீரராய் நிகழவல்லாரே—எவ்விடத்தும் எல்லாரும் அவ்வாறே புரிதல் வேண்டும். இசைநயம் சிதைந்திருந்த வொருகாலத்தில், தெய்வகீதத்தின் தண்ணறுந் துளிகளன்ன தன் பாக்களைப்பற்றி ராபர்ட் பர்ன்ஸ் என்னும் கவிவரன், பெருமிதத்தொடு அடக்கமுந் தோன்ற, "அம்மம்ம! என் பாக்கள் விலையிடற்கரியவைகளாகவேனும் இருத்தல் வேண்டும், அல்லது ஒரு காசிற்கும் உதவாதவைகளாகவேனும் இருத்தல்வேண்டும்—ஆதலின், இருவிதத்திலும் அப்பாக்களை நான் பணத்திற்குப் பகரமாட்டேன்" என்றதேபோல், வீரச்செறிவுடைய காலத்திலும், மற்று வீரமேயற்றுச் சிதைந்திருக்கின்ற காலத்திலும்,—வீரமுடைய ஒவ்வொருவனும் சாற்றுதல் வேண்டுமன்றோ. இங்கு இம்மண்ணுலகில் கூலியும் விலையும் கணித்து முடிக்கின்ற காரியங்களிலெல்லாம் இந்தக் கொள்கையே ஆழ்ந்து புகுந்து ஊடாடவேண்டும்]"

முன் னோர்முறை, கார்லைலின் இப்பொன்னுரைகளை இவ்விதழ்களில் எடுத்தாண்டிருக்கின்றோம்—உண்மையே. இன்னும் ஆயிரம் முறை இயம்பினலுந் தகுமே தகும். பார்த்துப் பழையதென்று கழித்தற் கொத்ததன்றிது கேட்டுக்கேட்டுப் பழகப்பழக உறுதியே நனிபயக்கும் உண்மையாதலால். கடவுளிற் பழையது இப்பேருலகில் வேறொன்றில்லை.

மாநுடப்பெருமை இத்தகையதாதலின் இதனைப் பேசிய வாயினால் உரிமையைப்பேசுதற்கு யாரே உளங்கொள்வார். கோயிலுட் கால்வைக்கத் தமக்குரிமையுண்டென்பார் சிலர், அவர்க்கு இலதென்று மறுப்பார் பிறர். நம்முடைய நாட்டினை நாமே ஆண்டு கொள்கின்ற உரிமை உளதென்பார் எல்லோரும்—ஓட்டுப்பெட்டியுள் புகுந்து புறப்பட்ட சில தலைகளைக் கொண்டுபோய்ச் சட்டசபைகளில் ஆட்டிவைப்பது என்பதல்லால் இவ்வுரிமைக்கு வேறுபொருளில்லை, சரதம்). நம்மை நாம் ஆண்டுகொள்கின்ற உரிமையால் பெருமையடைய வேண்டுமென்று அவாவுகின்றவர், கோவிலிற்குட் செல்கின்ற உரிமையைக் கொடுத்துச் சிலரைப் பெருமைபடுத்தவேண்டாமோ என வற்புறுத்தும்போது, தாம் கேட்கின்ற உரிமையும் பிறர்க்குக் கொடுக்கவிரைகின்ற உரிமையும் பெருமையே வாய்ந்தனபோல்தோன்றி மக்களைமருட்டுகின்றனவே. மற்று, உரிமை என்று ஒன்றை உணர்வதே சிறுமைக்கறிகுறி என்று கூறினோம். ஆதலாற்றான் "பெருமையேபோலும் உரிமை அவையன்ன ஒப்பவைதாம் யாங்கண்டதில்" என்ற சொல் ஏற்புடைத்தாகின்றது. மாநுடப் பெருமையின் மெய்ம்மை அலமந்து ஆவலிக்காது என் செய்யும். இப்படியே மெய்ம்மையைத் துன்புறச் செய்வார் உய்வாரோ!

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

### 24. யோகம்

[425-வது பக்கத் தொடர்ச்சி]

#### 9. ஹடயோகம்

(ii) உணவு.

ஹடயோகிகளுக்குத் தங்கள் தவத்தினிற்செய்யும் உழைப்பினுக்கிடையே உணவுகொள்ள அவகாசம் கிடைப்பதரிது. இராஜயோக அப்பியாசிகள்போல ஹடயோகிகள் தினத்திற்கு ஒருமுறை உண்பதும், அவ்வுணவு காய்கனிகளால் ஆக்கப்பட்டதா யிருப்பதும் நாம் காண்டலரிது. இவர்கள்செய்த தேகசுத்தியாலும், தேகதததுவ ஆட்சியாலும் பலநாட்களுக்குஒருமுறை உண்பதும், கிடைத்ததை உண்பதும், ஊனைக் கொடுத்தாலு முண்பதும், பலகாலம் உணவே கொள்ளாமல் நிஷ்டையிலிருப்பதும் இவர்களுக்குச் சகஜமாம். இதற்கு அத்தாட்சி, அகஸ்தியமுனிவர் கந்தபுராணத்தில் காண்க) பொதியமலைக்குப் போகும் வழியில், வாதாபி என்னும் ஓர் அரக்கனை ஆடாக்கி அவனைச் சமைத்து வில்வலன் இவருக்குப் படைத்தானென்றும், அவ்வாட்டை யுண்டபின்னர், வாதாபியை வெளிவர வில்வலன் கூவியபோது, அவனைச் சீரணம்செய்துவிட்டாரென்றும் புராணம் கூறுகிறது. எனவே, சில யோகிகள் மாமிசவுணவு கூடாதென்னும் நியமத்திற்கு மீறியவரென்றும், சாதாரண மக்களுக்குரியதான விதிகளை அவருக்கு நாம் ஏற்படுத்தலாகாதென்பதும் விளங்கும்.

ஹடயோகிகள் தவத்தில் தொடர்ச்சியாய்ப் பல நாள்களிருப்பதும் சிலநேரம் ஓய்ந்து வெளிவந்து ஸ்நானம் முதலிய கடன்களைக் கழிப்பதும், பெற்ற வுணவை உண்பதும், பிறகு தவத்திலமைந்து பல நாள் தம்மை மறந்திருப்பதும் வழக்கம். இவ்வாறு

தவத்தியானத்தில் மூழ்கியயோகிக்குத் தான் ஒருநாள் உட்கொண்ட உணவு பலநாட்களுக்குப் பயன்படு மாகிலும், அது வீணுகாமல் அன்னமயமாய் இரத்தத்தில் கலந்து உடலில் பரவவும், பசியின் உபத்திரவம் வாராதிருக்கவும், கபாலத்தின் கீழுள்ள மதிமண்டலத்திலிருக்கும் ஒருவகை அமுதைச் சதாஉட்கொள்வர். அது எவ்வாறெனின், யோகியானவன் வாயை மூடிக்கொண்டு நாவை உட்புறமாக மடித்து அதன் நுனியை "உள்நாக்கு"க்கு மேல் செலுத்துவான். உள்நாக்கு வரையில் செலுத்துவது எல்லா மக்களும் சாதாரணமாய்ச் செய்யக்கூடிய காரியமே. இருமல் முதலிய "தொண்டை" நோய்களைத் தீர்க்க வேண்டுமானல், மருந்தின்றியே ஒருவன் தனது "நாக்கின் நுனி"யால் உள்நாக்கின் பாகத்தைச் சிறிதுநேரம் துடைப்பானுயின் அங்கிருந்து கசியும் நீரானது கண்டப்பிரதேசத்திலுள்ள இரணங்களை நிவர்த்தித்து, விடா இருமலையும் தணிக்கும். இதனை நோயுள்ளவர்கள் செய்து பரிட்சிக்கலாம். ஹடயோகிகள் தங்கள் நாவை உள்நா வளவில் நிறுத்திக்தாது மேலே மூக்கின் துவாரத்திற்குச் சரியாய்க் கொண்டுபோவது வழக்கம். இவ்வாறு செலுத்துவதில் நாவின் அடியிலுள்ள ஒருவகை ஜவ்வானது இழுத்து நிறுத்துமாதலால், அதைத் தினம் சிறிது சிறிதாக அறுத்துக்கொண்டு தம் நாவின் நீட்சியை அதிகரிக்கச் செய்வர். அவ்வாறு செய்வதால் வாயினிடை யுழலும் நாவானது உள்நாவின் பின்புறமுள்ள மூச்சுக்குழாயின் வழியே மேல்நோக்கி நின்றும் அக்குழாயில் சுழன்றும் வரும். இதனல் பிராணவாயு விரயமாகாது அடங்குவதுடன், கபாலத்தின் அடியிலுள்ள சந்திரமண்டலத்திலிருந்து அமுத ஊற்று ஏற்படும்.* இதைச் சதா பருகிக்கொண்டு தாகமும் பசியும் யோகிகள் தணிவர். பலகாலம் உணவின்றி யோகத்தியானத்திலுள்ள பெரியோனது திடசாத்திரசரீரம் கரைய ஆரம்பிக்கும். அனுவசியமான தசை முதலியன கரைந்து, மேற்கண்ட "சந்திரமண்டல" ஊற்றில் அமுதநீராய் மாறி அத்தவசிக்கு உணவாகும். இதனல்தான் பல ஆண்டுகள் உணவின்றித் தவத்திலிருக்கவும், அதனல் தேகம் கெடாமலிருக்கவும் கூடியவர்களாகிய யோகிகள் உணவால் உண்டாகும் இடையூறுகளிலிருந்து நீங்கி ஒருமனதாய்ப் பலகாலம் மௌனநிலையிலிருந்து சச்சிதானந்த பராபரத்தின் அருளை நாடிநிற்பர். இத்தன்மையைத் தாயுமானவர், அடியிற்கண்டசெய்யுளில் வெகு அழகாய் விளக்குகின்றனர்:—

காயிலை யுதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதி ருந்தும்,
தீயினிடை வைகியுந் தோயமதில் மூழ்கியுந்
தேகங்க ளென்பெ லும்பாய்த்
தெரியநின் றுஞ்சென்னி மயிர்கள் கூடாக்குருவி
தெற்ற வெயிலூ டிருந்தும்,
வாயுவை யடக்கியும் மனதினை யடக்கியும்
மௌனத்தி லேயிருந்தும்,
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுதுண்டு
வனமூ டிருந்து மறிஞர்
ஆயுமறை முடிவான அருணடி ஞர்அடிமை
அகிலத்தை நாடல் முறையே ?
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே.

ஆனந்தமான பரம், 4.

இன்னம் பிறப்பதற் கிடமென்னி லிவ்வுடல
மிறவா திருப்ப மூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண் டலத்திலுற
என்னம்மை குண்ட லினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
பேயேனை நல்க வேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டெனி னிம்மையே
பேசுகர்ப் பூர தீபம்
மின்னும் படிக்ககண் டாகார வன்னைபால்
வினையேனை யொப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன் றவையன்றி
விவகார முண்டெனிலோ
தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்தி முதலே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே.

சச்சிதானந்தசிவம் 9.

(iii) முத்திரை. முத்திரை யென்பது, (ஆங்கிலத்தில் பொருள்தருவது போல்) அசைக்கவொட்டாத குறியின் நிலையாகும். அதாவது, மனதை யொடுக்கி ஒருவழி நிறுத்தும்போது, புலன்களையும் அவ்வாறே நிறுத்தி ஓரே நோக்கில் வைப்பது முத்திரையாம். முத்திரைகள் பலவுள. அவற்றுள், **சின்முத்திரை** யென்னும் ஞானமுத்திரையாவது, ஒவ்வொருகையின் ஆள்காட்டி விரலும் பெருவிரலும் வளைந்து ஒரு வட்டமாய்ச் சேர, ஏனைய விரல்கள் நீட்டப்பட்டும், நாபிக்குமேலே இடதுகையின் உள்ளங்கை ஆகாயத்தை நோக்கவும், வலது புறங்கையானது மார்பை நோக்கியவாறு எதிரில் நிறுத்தப்பட்டும், பத்மாசனத்தில் இருந்து இம்முத்திரையை நோக்கியபடியே சலனமற்று ஒரு யோகி தியானத்திருத்தலாம். * தாயுமானவர் இதைப்பற்றியே,

கற்றதுங் கேட்டதும் தானே யேதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிஷ்டை கூட வன்றோ ?

நின்ற நிலை 3.

கல்லாலின் நீழல்தனின் ஒருநால் வர்க்குங்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொல்லப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றோ?

கல்லாலின் 1.

என்றார்.

* நீற லேத்ததோர் மேனி நிமிர்சடை
யாற லைக்கநின் றூடு மழதினைத்
தேற லைத்தெளி யைத்தெளி வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.
உள்ளத் திருக்குறுந்தொகை 1.

* உரத்தி னலரக் கன்னுயர் மாமலை
நெருக்கி னனை நெரித்தவன் பாடலும்
இரக்க மாவருள் செய்தபா லைத்துறை
கரந்தி னுற்றெழு வார்வினை யோயுமே.
திருப்பாலைத்துறை—திருக்குறுந்தொகை 11.



இதைப்பற்றி அப்பரும் அவ்வாறே யுணர்த்துவார்:—

சொல்லானைச் சுடர்பவளச் சோதியானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செய்த
வில்லானை யெல்லார்க்கு மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேத நான்கும்
கல்லாலி னீழற்கீ ழறங்கண் டானைக்
காளத்தியானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேனி னைக்கப்பெற் றுய்ந்தவாறே

திருநள்ளாறு—திருத்தாண்டகம் 8.

இம்முத்திரையைப் பெரும்பாலும் ஞானமார்க்க ஹடயோகிகளே கைக் கொள்வார். இது அறத்தை யுணர்த்தவோ, பக்திப்பொருளை யுணர்த்தவோ, இன்றேல் பேரின்பத்தன்மையை யுணர்த்தவோ, மலங்களை நீக்கவோ, அத்துவித நிலையைக் காட்டவோ என்னும் அர்த்த பேதங்கள் பல பெற்றுத்திகழும். அவற்றை மற்றோரிடத்தில் விவரிப்பாம். இனி, ஹடயோகிகள் பெரும்பாலும் கைக்கொள்ளும் முத்திரைகள் கேசரி பூசரி முதலியன. இவைகளின் யோகாசனத்திலமர்ந்த யோகியானவன் தன்னிரு கண்ணையும் இமைக்காது நாசிநுனியையேனும் அல்லது தன் புருவமத்தியையேனும் நோக்குபவனுய்ப் பலகாலம் பழகுதலாம். இந்த முத்திரைகளின் முதிர்ச்சியில் எரிநட்சத்திரம் போல் ஒருசோதியோட்டம் †அடிக்கடி காணப்படும். இதனல் தேகஆட்சியும், மனவன்மையும், ஒழுங்கு நிலையும், சலனமற்ற மனநிலையும் நேரும். ஆயினும் முத்திக்காவது, வேறு சித்திகளுக்காவது இவை தாமே பயன்படா. எரிநட்சத்திரத்தைப்போல் கண்டவுடன் மறையும் இச்சோதியோட்டத்தில் காட்சிக்கு இன்பநலம் உண்டென்பார்; அது உண்மையென்றே நாம் எண்ணவேண்டும். ஏனெனில் நமது அவயவங்களினிடையே ஒரு இன்பப்பெருக்குளது. அதைப் பிடித்து நாம் அநுபவிக்கவுங் கூடும். இதற்கு உதாரணமாக, மற்றும் சில முத்திரைகளை யாவரும் பரிக்ஷித் தறியும்வண்ணம் இங்கு வகுத்துரைப்போம்:—

(1) இரண்டு காதுகளையும் அழுத்திக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு மனதை அங்குஉண்டாகும் ஒலியில்நிலைக்கவைப்பின், முதலில் கோயில் மணிச் சப்தம் உண்டாகும். பிறகு பலவகை இசைக்கருவிகளின் சையோக சங்கீதம் (Orchestra) கேட்கும். இது கேட்கக் கேட்க இன்பமாயிருக்கும். அதில் ஒருநாள் பழகியவன் மறுபடியும் இந்தச் சங்கீத ‡கச்சேரியை வரவழைக்க முயலாதிரான்.

(2) இதற்கு மேலானதோர் இடமுமுண்டு. செவிகளை. யழுத்திக்கொள்ள இரண்டுகைப் பெருவிரல்கள்போதும். அவற்றல் செவிகளை வெளிச்சப்தம் புகாம லழுத்திக்கொண்டவுடன் முன்னே சொன்ன சங்கீத ஆரம்பமாகும். அதைக் கவனியாமல் இரண்டு ஆள்காட்டி விரல்களால் இரு கண்களை அழுத்திக்கொண்டு உள்ளே தோன்றுவது யாதென்று, தோற்றும் உருவத்திலேயே மனதை நிலைப்படுத்தினல், ஒருவகை ஒளி தொன்றும். இந்த முத்திரையைச் சூரியமுத்திரை யென்று சொல்வதும் உண்டு. இம்முத்திரையின் முதிர்ச்சியில் கோடிசூரியப் பிரகாசமானதோர் சூரியன் காணப்படும். * அதன் ஒளி, வெப்பமாயும் துன்பமாயும் இராமல், சாந்தமாயும் இன்பமாயுமிருக்கும். ஆயினும் இது ஞானசூரிய னன்று, ஞானவொளியு மன்று. கட்புலனில் இருக்கும் கிரியாசக்தியால் உண்டாகும் சூரியனுதலால், இது மாயையிலிருந்து நீங்கப் பயன்படலாமேயன்றி அவத்தையென்னும் அந்தகாரத்தைக் களைந்த சுடரன்று. இதில் கண்ணல் அநுபவிக்கத்தக்க அழகைக்கண்டு ஆநந்திக்கலாம்.

(3) இதற்கும் மேலான முத்திரையொன்று உண்டு. அதை நித்திலமுத்திரை யென்றும் கூறுவர். † இது அமைப்பது எவ்வாறெனின், முன் சொன்னவாறு இரண்டு செவிகளைப் பெருவிரல்காளாலழுத்தி, கண்களை ஆள்காட்டி விரல்களாலும் போதாவிடில் நடுவிரல்களாலும் அழுத்தி, நாசித்துவாரங்களை மோதிர விரல்களா லழுத்திக்கொண்டு பிராணுயாம முதிர்ச்சி நிலையில், மேற்கண்ட ஒளியையும், அதன் முன் கூறிய ஒலியையும் கவனியாது சலனமற்று, நினைவு விட்டு நிற்கும் யோகிக்கு முதலில் மேற்சொன்ன சூரியனும் பிறகு அதுவும் போய்ப் பிராகாசமான வானமும் நட்சத்திரங்களும் காணப்பட்டு ‡ முடிவில் ஒரு பெரிய முத்தானது திரண்டு முன்னே வந்து தோன்றும்.உலகத்தில் காணப்பட்ட முத்துக்களுக்கும் அதற்கும் யாதொரு உவமையில்லை. இதைக்கண்டபோது மனம் அதிலேயே லயமாகிப் பேரின்பத்திற்கு நிகராகும் இதுவெனச் சொல்லத்தக்க ஆநந்த பரவசனுய்த் தன்னை மறந்து அந்த யோகியானவன் கற்பகாலங்கள் அதன் சம்பந்தத்துடன் இன்பத்தில் மூழ்கிவிடுவதுமுண்டு. ஆயினும் சன்மமோ இதனல் ஒழியாது; மறுபிறப்பெடுக்கவும் நேரும். ஆயினும் இம்முத்திரைகளின் முடிவில் விடய இந்திரிய சக்திகளின் வன்மையால் சிருஷ்டிக்கப்பட்ட இச்சூரியன், முத்து முதலி

† நம்பனை நால்வேதங் கரைகண்டானை,
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் றன்னைக்
கற்பகமா யடியவர்கட் கருள்செய்வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை நாயிற்றைத் தீயை நீரை
யம்பொனை யாவடுதண் டுறையுண் மேய
வரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே,
திருஆவடு துறை - திருத்தாண்டகம் 1.

‡ ஊறினு ரோசையுள் ளொன்றினு ரொன்றிமால்
கூறினு ரமர்தருங் குமரவேள் தாதையூர்
ஆறினர் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினர் வழிபடுந் தென்குடித் திட்டையே"
சம்பந்தர்.

* விண்ணிடைமின்னுெப் பானை
மெய்ப்பெரும் பொருளொப் பானைக்
கண்ணிடை மணியொப் பானைக்
கடுவிருட் சுடரொப் பானை
யெண்ணிடை யெண்ண லாகா
விருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்ச
மழகிதா நினைந்த வாறே.
நினைந்த திருநேரிசை 9.

† இம்முத்திரைகளுக்குப் பற்பல பேர்களுண்டு. அவைகளை அறியவேண்டியது இங்கு அநாவசியம்.

‡"என்னுணவன் இசையாளவன் இளஞாயிறின் சோதி
அன்னவன துறையுமிடம் ஆலந்துறை யதுவே"
சம்பந்தர்.

யனஉலகத்திலுள்ள எல்லாச் சடப்பொருள்களுக்கும் மேலாய் நீடூழி நிற்கும் ஒருவகை நல்ல சிற்றின்பமாகவும் தியங்கும். பேரின்ப வடிவமான பெம்மானது சொரூபத்திற்கு உவமை கூறத்தக்க இச்சூரியனையும் முத்தினையும் எண்ணியே நம் திருநாவுக்கரசும் சில இடங்களில் குறிக்கும் சூரியனும் முத்தும், உலகத்திற் காணப்படாதனவாகி மேற்சொன்னவைகளாய்த்தான் இருக்கவேண்டுமென்று நாம் அநுமானிக்கத் தக்க *பாசுரங்கள் தேவாரத்தில் ஆங்காங்குக் காணப்படுகின்றன:—

உளரொளியை யுள்ளத்தி னுள்ளே நின்ற
 வோங்காரத் துறுபொருள தாயினானை
விளரொளியை விடுசுடர்க ளிரண்டு மொன்றும்
 விண்ணொடுமண் ணாகச மாயினானை
வளரொளியை மரகதத்தி னுருவா னானை
 வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தி யேத்துங்
கிளரொளியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
 கேடிலியை நாடுமவர் கேடி லாரே.
  திருக்கீழ்வேளூர்—திருத்தாண்டகம்.

பகழிபொழிந் தடலரக்கர் புரங்கண் மூன்றும்
 பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரு மமுதைத் தேனைப்
 புண்ணியனைப் புவனியது முழுதும் போத
உமிழுமம்பொற் குன்றத்தை முத்தின் றூணை
 உமையவடம் பெருமானை யிமையோ ரேத்துந்
திகழெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
 செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே
  [னானே.
  திருவெறும்பியூர்-திருத்தாண்டகம் 4.

உருத்திரனை யுமாபதியை யுலகா னானை
 யுத்தமனை நித்திலத்தை யொருவன் றன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
 பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் றொத்தொப் பானை
 நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
 கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே.
  திருக்கஞ்சனூர் - திருத்தாண்டகம் 5.

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
 யழகெழுத லாகா வருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
 சோமனையுங் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் மடி
 பிழைத்தார் பிழைப்பரிய வல்ல வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் னடி
 திருவீரட் டானத்தெஞ் செல்வ னடி.
  திருவதிகை வீரட்டானம் - திருவடித் திருத்தாண்டகம் 4.

விண்ணப்ப விச்சா தரர்க ளேத்த
 விரிகதிரோ னெரிசுடரோன் விண்ணுமாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்து ளேயும்
 பசுபதி பாசுபதன் றேச மூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
 கழிப்பாலை மேய கபாலப்பனார்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
 வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.
  திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 6.

* இருளின் வண்ணமும் ஏழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமும் சோதியின் வண்ணமும்
மருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவரை யாறரே.'
 திருவையாறு—திருக்குறுந்தொகை 4.

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[428-வது பக்கத் தொடர்ச்சி]

## 4. இரதநூபுரச் சருக்கம்.

231. காதலா லறிவது காமங் காதலே
 ஏதிலா ரறிவினா லெண்ண லாவதன்
றாதலான் மாதராள் திறத்தி னானூல்
 ஓதினா ருரைவழி யொட்டற் பாலதே. 114.

காதலால் - உள்ளன்பினால், அறிவது - தோன்றி வெளிப்படுவது, காமம் - காமவுணர்ச்சியாகும்; காதலே - அத்தகைய காதலோ, ஏதிலார் அறிவினால் எண்ணல் ஆவது அன்று - அன்னியர் தமது அறிவைக்கொண்டு ஆராய்ந்தறியக் கூடியதொன்று அன்று. ஆதலால் - ஆகையால், மாதராள் திறத்து - இவளுடைய கலியாண விஷயத்தில், ஆனைநூல் ஓதினார் - (ஆன்றோர் விதித்தருளிய ஒழுக்கநெறியை உணர்த்தும்) உண்மை நூல்களை நன்றாய்ப் படித்தறிந்த மந்திரிமார்களின், உரைவழி - அபிப்பிராயத்தை, ஒட்டல்பாலது - ஒத்து நடத்தல் தக்கதாகும் (முறைமையாகும்.)

காமம் - மெய்யுறுபுணர்ச்சி யின்பம். காதல் - அக்காமத்துக் கேதுவாகிய உள்ளன்பு.

காதலென்பது ஒருவருள்ளத்தில் எழும் உணர்ச்சியாதலின், அதை அவரவர்களே அறிதல்கூடும். பிறர் ஒருவாறாகித்து ஓரலாமல்லாது நன்குதேரல் ஒண்ணாது. ஆகையால் மேலோர் உரைத்த காமநூல் முதலியவற்றை நன்று கற்று முற்றிய மூதறிஞராகிய மந்திரிமாருடன் கலந்தாலோசித்து, அவருடைய அபிப்பிராயப்படி நடத்தலே நேரிதாம் என்று அரசன் எண்ணியவாறும்.

ஆனைநூல் - மெய்ந்நூல்; ஆனை - மெய், (பிங்கலந்தை).

---

232. தன்னுணர் பொறிபிறர் தங்கண் கூட்டென
 இன்னண மிருவகைத் திறைவர் வாழ்க்கையே
 தன்னுணர் பொறிப்புலந் தன்னி னும்பிறி
 தின்னண மியற்றுகென் றமைச்சரேவுவார்.115.

இறைவர் வாழ்க்கை - அரசர் அரசுபுரியும் முறை, தன் உணர் பொறி - தாமே தமது ஐம்பொறிகளால் உணர்ந்தறியும் அறிவும், பிறர்தம் கண்கூட்டு - பிறருடைய அறிவின் சேர்க்கை, என - என்று, இன்னணம் இருவகைத்து - இவ்வாறு இரண்டுவிதமாகும். (இவ்விரண்டினுள்) தன் உணர் பொறிபுலம் - தானே உணரும் பொறிகளின் உணர்ச்சியாகிய அறிவு, தன்னின் ஆம் - தனது இயற்கைமதியாலும் கல்விகேள்விகளாலும் ஆகும் பிறிது - பிறரறிவாகிய மற்றையது, இன்னணம் இயற்றுக என்று - இவ்வாறு செய்கவென்று, அமைச்சர் ஏவுவார் - மந்திரிகள் எதைக் கட்டளையிடுகிறார்களோ அஃதாகும்.

பொறி - (ஆகுபெயர்) பொறிகளின் வாயிலாக அறியும் அறிவு. கண் - அகக்கண், ஞானம். புலம்-அறிவு.

---

233. தண்ணிய தடத்தவே யெனினுந் தாமரை
 விண்ணியல் கதிரினால் விரியும் வேந்தரும்
 புண்ணியப் பொதும்பரே புரிந்து வைகினும்
 கண்ணிய புலவரா லலர்தல் காண்டுமே. 116.

தாமரை - தாமரைமலர், தண்ணிய தடத்தவே எனினும் - குளிர்ந்த குளத்தினிடத்தவாய் இருப்பினும், விண் இயல் கதிரினால் - ஆகாயத்திலே இயங்குகின்ற சூரியனால், விரியும் - மலர்ந்து விளங்கும். (அதுபோல) வேந்தரும் - அரசர்களும், புண்ணியம் பொதும்பர் - நல்வினைப்பயனாகிய செல்வபோகங்கள் நிரம்பிய அரண்மனைக்குள்ளே, புரிந்து வைகினும் - விரும்பி உறைந்தாலும், கண்ணிய - எல்லாவற்றையும் ஆராய்ந்தறியும், புலவரால் - பேரறிஞரால், அலர்தல் - புகழ் பெற்று விளங்குதலை, காண்டும் - நாம் பார்க்கின்றோம்.

தண்ணிய - தாழ்ந்த, கீழேயுள்ள, என்றலுமாம். கதிர் - (ஆகுபெயர்) சூரியன். பொதும்பர் - மரங்கள் செறிந்த சோலை; இங்கே பலவகை யின்பப் பொருளும் நிறைந்த அரசன் கோயிலுக்கு உவமையாகுபெயர். புலவர் - புலமை (அறிவு) வாய்ந்தவர். அலர்தலாவது, புகழ்பெற்று விளங்குதல்.

---

234. மாலமர் நெடுங்கடன் மதலை மாசிலாக்
 காலமைந் தொழுகுமேற் கரையுங் காணுமே
 நூலவர் நுழைவொடு நுழைந்து செல்லுமேல்
 வேலவ ரொழுக்கமும் வேலை காணுமே. 117.

மால்அமர் நெடும் கடல் - மேகங்கள் படியும் நீண்ட கடலிலோடும், மதலை-கப்பல், மாசு இலா கால்-நல்ல காற்று, அமைந்து ஒழுகும்ஏல் - பொருந்தி அடிக்குமானால், கரையும் காணும்-தனக்கு யாதொரு கெடுதியும் நேரிடாமல் இருப்பதோடு கரையையும் சென்றடையும். (அதுபோல), வேல் அவர் ஒழுக்கம் உம் - வேலை யேந்திய அரசருடைய செய்கைகளும், நூல் அவர் நுழைவு ஓடு நுழைந்தது செல்லும்ஏல்- நீதி நூல்களைக் கற்றறிந்த மந்திரிமார்களின் புத்தி நுட்பத்துணையால் நுணுகி ஆராய்ந்து நடக்குமானால், வேலை காணும் - நல்ல முடிவைப்பெறும்.

மால் - கருமை யென்றும் பெருமை யென்றும் உரைக்கலாம். வேலை - எல்லை, முடிவு.

---

[மேல்

235. ஒன்றுநன் றெனவுணர்ந் தொருவன் கொள்ளு
 மன்றென வொருவனுக் கறிவு தோன்றுமே
 நின்றதொன் றுண்டினி நீதி நூலினோ
 டொன்றினின் றவருரை உலக மொட்டுமே. 118.

ஒன்று - ஒரு காரியத்தை, நன்றென - நல்லதென்று, உணர்ந்து - தெரிந்து, ஒருவன் கொள்ளுமேல் - ஒரு மந்திரி அபிப்பிராயப்படுவானானால், ஒருவனுக்கு - மற்றொரு மந்திரிக்கு, அன்றுஎன அறிவு தோன்றும் - அது செய்யத்தக்கது அன்றென்னும் அபிப்பிராயம் தோன்றக்கூடும். (ஆதலால்) இனி நின்றது ஒன்று உண்டு - இப்பொழுது நான் செய்யத்தக்கதாயுள்ள செய்கை ஒன்று உண்டு. (அஃதாவது) நீதிநூலினோடு ஒன்றி நின்றவர் உரை - நீதியை விரித்துரைக்கும் நூல்களோடு பழகிப் பொருந்தி நிற்கும் மந்திரிமார்களின் கட்டுரையைக் கேட்டறிதலேயாகும். உலகம் ஒட்டும் - அவ்வாறு நான் கேட்டுச் செய்யின் என் செயலை உயர்ந்தோர் ஒப்புக்கொள்வார்.

---

236. அந்தண ரொழுக்கமு மரசர் வாழ்க்கையும்
 மந்திர மில்லையேன் மலரு மாண்பில
 இந்திர னிறைமையு மீரைஞ் ஞூற்றுவர்
 தந்திரக் கிழவர்க டாங்கச் செல்லுமே. 119.

அந்தணர் ஒழுக்கமும் - பிராமணர்களின் ஆசாரங்களும், அரசர் வாழ்க்கையும் - அரசர்களின் அரசாட்சி முறையும், மந்திரம் இல்லையேல் - மந்திரம் இல்லாமற்போனால், மலரும் மாண்பு இல - பயன்பெற்று விளங்கும் சிறப்பில்லன ஆகும். இந்திரன் இறைமையும் - இந்திரனது அரசாட்சியாகிய காவற்சாகாடும், தந்திரக்கிழவர் ஈரைஞ்ஞூற்றுவர் தாங்க - இராஜதந்திரங்களை உணர்ந்துரைப்பதற்குரிய மந்திரிகள் பிரகஸ்பதியை முன்னிட்ட ஆயிரவர் துணைபுரிந்து சுமந்து இழுத்தலால், செல்லும் - இனிது நடைபெற்றுக் கடைபோகும்.

மந்திரம்; சிலேடை, அந்தணரொழுக்கத்துக்கு வேதமந்திரங்களும், அரசர் வாழ்க்கைக்கு மந்திராலோசனையும். தாங்க, செல்லும் என்பதற்கேற்ப 'இறைமை'சாகாடுஎன்று உரைக்கப்பட்டது. சாகாடு-வண்டி.

---

237. என்றுதன் மனத்தினா னெண்ணி யீண்டுசீர்
 நின்றநூற் கிழமையி னீதி மாக்களை
 ஒன்றிநீர் தருகென உழைக்குற் றேவலார்
 சென்றவர்க் கருளிது வென்று செப்பினார் 120

என்று தன் மனத்தினன் எண்ணி : என்று அரசன் தனது மனத்தினாலெண்ணி, ஈண்டு சீர்நின்ற- பெருகிய புகழ் நிலைத்த, நூல் கிழமையின் நீதி மாக்களை - சாஸ்திரங்களின் உரிமையைப் பூண்ட நீதிகளைத் தேர்ந்த மந்திரிமார்களை, ஒன்றி - உற்று, நீர் தருக என்ன - நீங்கள்அழைத்து வாரும் என்று சொல்ல, உழைக்குற்றேவலார் சென்று - அவ்வாறே அவன் அருகிலிருந்த ஏவலாளர் சென்று, அவர்க்கு - மந்திரிமார்களுக்கு, அருள் இது என்று - அரசன் பணி இது என்று, செப்பினார் - சொன்னார்கள்.

'நூற்கிழமை' யாவது நூல்களைப் பலகலும்படித்து நன்று தேர்ந்து அவற்றின் உண்மைப்பொருளை உணர்ந்துரைக்கும் உரிமை. மாக்கள் - மக்கள். குற்றேவல் - குறு ஏவல், சிறு பணிகள்.

இரதநூபுரச் சருக்கம்
முற்றிற்று.

---

# நவராத்திரி

## [ஓர் நாடகம்]

[ 433-வது பக்கத் தொடர்ச்சி ]

தியா:—அவன் கேட்கிற கந்துவட்டியையும் கெடு வட்டியையும் முணுமுணுக்காமல் கொடுத்துவிட்டுக் கணக்குச் சரியாஎன்றும் பார்க்காமல்.......உன் கடன் உனக்கே தெரியாதா ?

மாயா:—பத்தாயிரம் பதினயிரமோ—ஐம்பதோ எண்பதோ என்னவோ !

தியா:—பேஷ்! கணக்கில் புலி! உன் வயது என்ன?

மாயா:—பதின்மூன்றிருக்காதா ?

தியா:—(சிரித்து) பதின்மூன்றுக்கும் குறைவுதான்-அதற்குத் தக்கபுத்தியே உனக்கிருப்பதால் சிரித்து என் செய்ய—அழத்தான் வேண்டும்.

மாயா:—நான் போகட்டுமா ?

தியா:—இரு அப்பா, பயப்படாதே—உன் ஊர் எது ? எங்கேயோ உன்னை நான் முன்னே பார்த்திருக்கிறேன் !

மாயா:—என் ஊர் கடம்பக்குறிச்சி!

தியா:—ஆம்—அங்குத்தான் பார்த்திருப்பேன்... நாணயச்சங்கம் இருக்கிறதே அங்கே, சேர்ந்தாயா நீ ?

மாயா:—இல்லை! நாணயமாவது சங்கமாவது எனக்கெதற்கு ?

தியா:—ஏன்? நாணயம் வேண்டாமா மனிதனுக்கு?

மாயா:—சங்கம் எனக்கெதற்கு? பஞ்சாயத்து... என்னென்னவோ...வாசகசாலையாம்...பஜனைக் கூட்டமாம்...

தியா:—சொல்லட்டுமா — உன் கடனையெல்லாம் அடைத்து உன்னைச் சுதந்திரனாக்க வழிகாட்டுகிறேன் உட்கார்-வா இங்கே! இப்போதுசொன்னாயே அவை உன் ஊரில் நேரே நடந்துவருகின்றனவா ?

மாயா :—நானறியேன்.

தியா :—சொல்,நான்தான் அவைகளை அங்குநிறுவினவன்;சரியாய் நடக்காவிட்டால் மீண்டும் வருகிறேன்.

மாயா :—காலை மாலை பஜனைமட்டும் வரும் - நான் ஏற்றம் இறைக்கும் கீச்சுச்சத்தத்தில் பாட்டுக்கூடச் சரியாய்க் கேட்காது...

தியா :—ஏற்றத்தை நிறுத்தி, மாட்டைக் களைப் பாற்றி நீயும் பாட்டைக் கேட்கக்கூடாதா ?

மாயா:—நன்றாயிருக்கிறது - நான் பாட்டில் மயங்கியிருந்தால் பயிர் என்னாகும் ?...

தியா :—சரிதான்....ஆனால்...அதோ, அம்மா... உனக்காகக் காத்திருக்கிறாள் போலிருக்கிறது...

மாயா :—எங்கே...எந்த அம்மா ?

தியா :—மச்சில்தான்—நீ பேசிக்கொண்டிருந்தாயே—அப்போது...மறைந்துவிட்டாள்—போ !

மாயா :—ஓகோ, கரி கொடுக்கிறேன் என்றது—காய்க்கிறார்களோ என்னவோ !...நான் போகிறேன்.

[மோட்டார்லாயப் பாதையில் மறைகிறான்]

தியா :—யாராயிருக்கும் இவள் ? கறி கொடுக்கிறாளாம்—சரிதான்—மறுகலியாணமும் ஆய்விட்டதோ ! எனக்கும் சொல்லவில்லை. மாற்றாந்தாயுமா இப்போது! இந்தக் கோவக்கிழவி போதாதென்று !...குஞ்சுவை எப்படியேனும் பலாத்காரமாயாகிலும் கொண்டே போகவேண்டும் — இங்கு விடக்கூடாது—ரகசியமிதுவா ? என்னைத் துரத்தியடிக்கப் பார்க்கிறார்கள்—சமையலறைக்குள் புகுந்தால் நான் அவளைக் கண்டுவிடுவேன்! —பெண் எவ்வளவு பெரிது! நம் இந்தியர் வாழ்வே வியப்பு--பொம்மைக் கலியாணங்களும் நடக்கும் !—17, 18வயதுப் பெண்களும் கிடைக்கும்! ஆனால் இதுவும் ஒரு பொம்மைதான் போலும்—மனமில்லா மணந்தானே..., பணத்துக்காக!....கூப்பிடுகிறேன் தைரியமாய்—(உரக்க) இதோ! இதோ—இதோம்மா ! மறைந்து விட்டாளே ! இதோ அம்மா!!

[ராஜீயா, மூன்றுசக்கர வண்டிமீது இவர்ந்து வலப்புறத்திலிருந்து வேகமாய் வருகிறாள்]

ராஜீ:—இதோ வந்தேன்!—அழுததோ குழந்தை? பின் ஏன் கூப்பிட்டாய் ?

தியா :--போய், இவ்வீட்டிலிருக்கிறாளே ஒரு அம்மாள், அவளை அழைத்துவா...மச்சிலேறிப்போய்...

ராஜீ :—அந்தக் கிழவி என்னை இங்கே வரவே கூடாதென்றிருக்கிறாள்—நான் போகிறேன். நீ வா பின்னால்...குழந்தையுடன்......

தியா :—கிழவியல்லள்-இன்னொருத்தி-சிறு பெண்.

ராஜீ :—குஞ்சுவா ? அவளும் என்னைக் கண்டால் காதம் விலகுகிறாள் !

தியா :—மூன்றாவதொருத்தி...பெரியவள் !

ராஜீ:—இல்லையே—இல்லை....குழந்தையை என்னிடம்கொடு. இந்தட்ரைஸிகிலை விட்டுக்கொண்டே, இவளை எடுத்துப் போகிறேன் பார்....கொண்டுவா...

தியா :—முதலில் நீ அவளை அழைத்துவா—அந்தச் சாமர்த்தியத்தை முன் சோதித்துவிட்டுப் பிறகு கால் வண்டி ஓட்டும் திறமையைக் காண்பேன்?

ராஜீ :—வேறு யாருமில்லை என்கிறேன்...யாரைச் சொல்கிறாய்...நீயே போயேன் ......பயமென்ன ?

தியா :—ஆம்—பயமென்ன? (இடப்பக்கத்தில், ராஜீயாவும் ட்ரைசிகிலில் தொடர்ந்துவரப் புறப்படுகிறான்) இவளே

[சுபத்திரை இடது தாழ்வாரத்தில் தோன்றுகிறாள்]

ராஜீ: —அக்பரைக் கொடு என்னிடம்—நீங்கள் பேசிக்கொண்டே இருவரும் நான் சைகில் விடுவதைப் பாருங்கள்-கொண்டு வாருங்கள்-தாருங்கள்!...

சுப:—கீழே விழுந்துவிட்டால்......இதுவென்ன வேடிக்கையா—

ராஜீ :—கொடு இங்கே !

தியா :—மாட்டேன் ! விழுந்துவிடும்—

[சுப:—அப்பாசொல்கிறபடி கேட்கவேண்டாமோ ?

தியா :—நானு அதன் தந்தை! (சிரிக்கிறான்)



ராஜீ :—எப்படி இரண்டு அப்பாக்கள்இருப்பார்—

சுப :—(வெள்கி) குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதால் அப்படி எண்ணினேன் ! (சிரிக்கிறாள்)

ராஜீ :—நீங்கள் இப்போது சற்றுமுன் அக்பரை எடுத்து முத்தமிட்டதால் குழந்தைக்குத் தாய் என்றழைப்பதா உங்களை நான் ! (வட்டமிடுகிறாள்)

சுப :—தாய்போல்தான் ..மெய்யே பெற்ற குழந்தையாயில்லாவிட்டால் என்ன ?

தியா :—மகிழ்வோடு கேட்டேன் இதை !...குஞ்சு உமது மெய்மகளல்லாவிட்டாலும் தாய்போலவே வளர்க்க வேண்டும். மாற்றாந்தாயின் கொடுமையொன்றும் செய்யவேண்டாம்! நான் குழந்தையின் மாமன்-என் தங்கை பொன்னி இறந்தாளாகிலும், பொன்னியே போல் காத்துவாருங்கள்.

சுப :—பொன்னியின் தமையனா நீங்கள் !

தியா :—ஆம் ! நான் இந்த வீட்டுக்குள்ளே வரக்கூடாதாம்-மூட்டைகளை எல்லாம் வெளியே ! அதோ அங்கேயே கிடக்கின்றன !

ராஜீ :—வா—நம் வீட்டுக்குப் போகலாம் ! இங்கிருப்பானேன் !

சுப :—கிழவியிடம் சொல்லி—எனக்கு இவ்வீட்டில் சுதந்திரம் இல்லாவிட்டாலும், கொஞ்சம் ஆகாரம் கொடுக்கவைக்கிறேன். இல்லாவிட்டால் நானே—

தியா :...வேண்டாம்—வேண்டாம்...

சுப:—இது அழகோ—ஊரார் சிரிக்கமாட்ரா—காமுப்பாட்டிக்கு அவமானமல்லவா? நானே அடுப்பு மூட்டி..

ராஜீ:—உங்கள் குழந்தையைக்கொண்டுவாருங்கள், அக்பரையும் அவனையும் ஒப்பிட்டுப் பார்ப்போம் !

தியா:—(திடுக்கிட்டு) குழந்தையா?

[சுபத்திரை, முகஞ்சிவந்து வெட்கி, தூண்மறைவில் பதுங்கிக்கொண்டு, சிரிக்கிறாள்]

எப்போது கலியாணமாயிருக்கும். ஆடிமாதம் ஆகாது-ஆவணியில்... (யோசிக்கிறான்)

ராஜீ:—குழந்தையுமொன்றிருக்கிறது.

தியா :—கொண்டுவாருங்கள் பார்க்கலாம் !

சுப —உனக்கென்ன தெரியுமம்மா—காற்சட்டைக்காரி-எமது உடையைப்பற்றி அறிவாயோ நீ(முன்வந்து) உங்களுக்கேனும் தெரியவில்லையா (வேகமாக ஓடி, உள்ளே மறைகிறாள்)

தியா :—மாம்பழப்புடவை ! கத்தரித்த சுருள்மயிரும் மாம்பழப்புடவையும்,புதுநாகரீகம் என்றெண்ணினேன்—ஆம்—கழுத்தில் தாலியில்லை...ஆம்—முட்டாள் நான். (பிரமித்து நிற்கிறான்) ராஜீயா, யாரிவள் தெரியுமா...(தாழ்வாரத்தில் உட்காருகிறான்)

ராஜீ :—(அருகு வந்து) யாரோ இவள்—குழந்தையைத் தா நீ.

தியா :—நீ இவளை இங்கு இதற்குமுன் பார்த்ததில்லையா ? (மரதியாய் அவள் கையில் குழந்தையைக் கொடுக்கிறான்).

ராஜீ :--இன்றைக்கே முதல்முதல் அவளைப்பார்த்தேன். அவள் தலைமயிர்போல் நானும் கத்தரித்துக் கொள்ளப்போகிறேன்—(குழந்தையுடன் ட்ரைஸிகிலில் புறப்படுகிறாள்)

தியா :—முழுதும் ஆணாகி விடவா ? ஐயையோ—குழந்தையை இப்படித் தூக்கிக்கொண்டு...முட்டாள் நான் என்ன மறதி !

ரஜீ :—பிடி என்னை!—பிடி பார்ப்போம்...குழந்தையுடன், ஒருகையாலே ஓட்டிக்கொண்டு வேகமாகப் போகிறேன் பார். (மறைகிறாள்)

தியா :—மோட்டார் வருகிறது பார் — (பின்புறம் விரைந்து மறைகிறான்)

[மோட்டாரரவம். காமுகொலு அறையின் முன்கதவுவழியாய்ச் சுபத்திரையும் பின் தொடர வருகிறாள். வண்டி நிற்கிறது — கண்ணுக்குத் தெரியவில்லை.]

காமா :—வாருங்கள், வாருங்கள், சாமியாரே ! (கைகூப்புகிறாள்)....நீயும் நமஸ்காரம் செய்! சாஷ்டாங்கமாய் !

சுப :—அவர் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறாரே! நம்மைப் பார்க்கவுமில்லை! பண்ணிப் பயனென்ன ?

[உருமபிள்ளை இடப்புறத்திலிருந்து வருகிறான்]

உரு :-குஞ்சு எங்கே? சாமியாரே! எழுந்திருங்கள் !

காமா :-நிஷ்டையிலிருப் பாரடா !--மெள்ளப்பேசு !

உரு :— இதோ-வந்துவிட்டோம்—எழுந்திருங்கள்! நேரமாகிறது..(கதவைத்திறக்கப்போவதால், மறைகிறான்)

காமா :—கண்திறந்துவிட்டார் ! என் குறைகளைத் தீர்த்தருளவேண்டும்—மன்றாடுகிறேன் ! என் குழந்தையையும்—

ஒரு குரல் :—விட்டோமா ?—ஆகா—நீங்களா?... சிவமயம் ! சிவமயம் !...ஐயர் எங்கே ?

[கண்களைப் பாதி மூடியவண்ணம் மெள்ள வருகிறான் துரைசிங்கன்]

காமா :—ஐயர் ஊரிலில்லை. நான்தானிருக்கிறேன் ! தங்களது மனோவசியத் திறமையை இன்று உருமபிள்ளை மெச்சிப் பேசினான். உடனே சொல்லி அனுப்பினேன்.என் மகன் வருவதற்குக் காக்காமல்...

துரை :—அப்படியா ? சொன்னதெல்லாவற்றையும் கேட்டோம்! இந்தப் பெண்தானா அவள்... இங்கே வாம்மா ! (சுபத்திரை பின்னிடுகிறாள்).

உரு :—இவளா ? ஆறுவயதுப் பெண் என்று சொல்லவில்லையா நான் ?

துரை :—இந்தப் பெண்தான் என்று எண்ணினேன்—(கண்ணை மூடிக்கொண்டு) தலைமயிரைக் கத்தரித்திருக்கிறதே—பிடிவாதக் குழந்தை—அடங்கா வெறியினால் செய்துகொண்டதோ என்று சந்தேகப்பட்டேன்...

காமா :—ஓடாதேயம்மா-சுபத்திரை—பயமென்ன-உனக்கு எனக்கு எல்லாருக்கும் குறைகள் இல்லையா, இந்தப் பெரியவர் எல்லாவற்றையுந் தீர்ப்பார்.

உரு :—இவளுக்கென்ன குறை—யாரிவள்? மயிர்க்குறைதான் குறை.

காமா :—நோயிலேகிடந்து, பாயும்படுக்கையுமாய்ப் பலநாள் கஷ்டப்பட்டு அழுகிய மயிரை...(அழுகிறாள்)

தியா :—(கண்ணைத்திறந்து) ஆம்—என்ன செய்ய? சிவனருள்!

உரு :—சொல்லுங்கள் சீக்கிரம்—(சுபத்திரையிடம்) நீயே சொல்லம்மா—கிழவிக்குத் துக்கம் தொண்டையை யடைக்கிறது !

சுப :— பாட்டி, ஏன் அழுகிறீர்கள்—தேம்புகிறீர்களே!—(அவளை விழாமல் பிடித்துக்கொள்கிறாள்)

காமா:—நல்ல பெண் இவள்—மயிருதிர்ந்து-அழகு குலைந்து—

சுப :—என் கதையை ஏன் சொல்லுகிறீர்கள் ?—குஞ்சுவைப் பார்த்துக் கொண்டுவரட்டுமா ?

காமா :—ஆம்—பார்த்துவா—எங்கே ஓடினானோ—சாமியாரே—வாருங்கள், நாற்காலியில் அமருங்கள் !

துரை :–(கையையும் தலையையும் அசைத்து) கூடாது!

உரு:—தரையில்தான் இவர் உட்காருவார்! நானும் வரட்டுமா அம்மா உங்களுக்குத் துணையாய்—குஞ்சு! குஞ்சு !!

காமா :—இவளுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை—பெருங்குறை எங்களுக்கும்-பெண்ணுக்கும்.

சுப :—நான் வந்து புலம்பினேனே உங்களிடம் அகமுடையான் வேண்டுமென்று ?

[இடப்புறத்தில் மறைகிறாள்.]

உரு :—இன்னும் கட்டிக்கொடுக்க வில்லையா ? ஆச்சரியமாயிருக்கிறதே!

காமா :—மயிர் செழிப்பாய் மீண்டும் வளர்ந்ததும், முகூர்த்தம் வைப்பதாக அவள் தாய்க்கு உத்தேசம். வாருங்கள்—திண்ணையிலாகிலும் உட்காரலாம்-மான் தோல் இல்லையே—மாயாண்டி ! கொண்டாடா, மான் தோலை !...மாயாண்டி ! அடே !

துரை:-(வலப்புற அறையின் தாழ்வாரத்தில் ஏறிக் கொண்டே) மானைக் கொன்றபின் தோல்மேல் அமர்ந்திருக்கச் சகியோம் நாம் !

(கீழே உட்காருகிறான்)

உரு :—என் காற்சட்டையும் பூட்ஸும் பாழாகிவிடும் - சாமியாரே—நான் நாற்காலியில் உட்காருகிறேன்; அனுமதி கொடுங்கள்.

காமா :—(மெள்ள) டே ! டே ! (கீழிறங்கும்படி கண் ஜாடை காட்டுகிறாள்.)

உரு :—(நாற்காலியில் உட்கார்ந்து) கதை முழுவதும் ஆதிமுதல் அந்தம்வரை முறையே ஓதுங்கள் !

காமா :—நான் மீண்டும் சொல்வானேன்...நீதான் எல்லாம் முன்னேயே சொல்லிவிட்டாயே !...

துரை :—(தலையை அசைத்துக்கொண்டு) ஆம் !

உரு :—நீங்களும் சொல்லுங்கள் ! நான் எதையேனும் மறந்துபோயிருக்கலாம்...

காமா :—வேறென்ன ? அம்மாப் பித்துப் பிடித்திருக்கிறது-அம்மா அம்மா என்று, இறந்து மறைந்தவளையே நினைத்துநினைத்து மயங்கி வெறியாடுகிறாள்.

துரை:—இது ஒரு பிரமாதமில்லை, நாம்—சன்னியாசிகள்—சிவத்தை-சக்தியை அப்படியேதான் அன்றோ தேடி அலைகிறோம்!

காமா :—கண்டுப்பிடித்து விட்டீர்கள் ! மகாத்மாக்கள் நீங்கள் !

துரை :—(தலையையசைத்துக் கண்ணை மூடிக்கொண்டு) ஏதோ, சக்திதேவியின் கிருபையால் உமது பேத்தியையும் தன் தாயைக் கண்டுபிடித்துவிட்டாப்போல் செய்ய இந்தச் சிவக்கட்டைக்கு (தனது தொடையில் அடித்து) ஏதோ திறமையுண்டு.

காமா:—என்னவாவது செய்து என் தொல்லையைத் தாங்கள் தீர்க்கவேண்டும்.

உரு:—அதைப்பற்றி ஒன்றும் கவலை வேண்டாம்.

காமா:—வீட்டில் அமைதியே கிடையாது. நாலு மாதமாய் எல்லாவற்றையும் பாழ்செய்கிறாள்! அழகிய பங்களா நலங்குலைந்து சீரழிகிறது...ஒரு சின்னஞ்சிறு பெண் இப்படி ஆட்டிவைப்பதா? பேயோ, பிசாசோ? சூனியமோ? ஏதுவோ?

துரை:—(தலையை மேலும் கீழுமாய் அசைத்தவண்ணம்) சிவமயம் !

உரு:—அவருக்குத் தெரியாதா? குழந்தையைக் கொண்டுவாருங்கள்.

காமா:—(மெல்ல) காணிக்கைகள் எப்போது—இப்பொழுதே...

உரு:—(உரக்க) என்ன ? சாமியாரிருக்கையில் ரகசியம் பேசக்கூடாது. அவ்ருக்குத் தெரியாமற் போய்விடுமா?

காமா:—தட்டில், வெற்றிலைபாக்குக் கொண்டு வரட்டுமா என்று கேட்டேன்!

உரு:—எனக்கா? இவர் தொடுவதில்லையே அவைகளை—அதுவும் நவராத்திரி!

துரை:—சக்தி உபாசனை! பட்டினி-இரவும் பகலும்!

காமா:—ஏதேனும் பாலாகிலும் அருந்தக்கூடாதா?

உரு:—காப்பி குடிப்பதுண்டா நீங்கள்?

துரை:—சீச்சீ! சிவ, சிவ.

உரு:-காப்பிபோட்டுக்கொண்டுவரச் சொல்லுங்கள். நாலைந்து நாளாய்ப் பட்டினி—ரக்ஷையை மந்திரித்துக் கட்டுவதற்குமுன் செத்துவிட்டால் என்ன செய்வோம்!—அவர் சமாதி அடைந்தால் நமக்கல்லவோ நஷ்டம் ?

காமா :—போய்க் கொண்டுவருகிறேன் — குஞ்சு! குஞ்சு ! அவளைத் தேடிக்கொண்டு போனவளைத்தேட வேண்டியிருக்கிறதே இப்போது-சமயத்திற்குச் சமையலுக்கு உதவ இன்று வந்தானே!...மாயாண்டி! குஞ்சு எங்கேடா? குஞ்சு!......உருமபிள்ளை, நீயும் போய்த் தேடேன்...நேரமாகிறது பார்......

உரு :—பேஷ்! பேஷ்! சாமியாரைத் தனியாய் விட்டுச் செல்வதா ?— பணிவிடை செய்ய மனிதர் யாரிருக்கிறார்ககள்.

காமா :—மன்னியுங்கள்—மன்னியுங்கள் — தெரியாத் தனமாய்க் குருட்டுக்கிழவி பிதற்றிவிட்டேன்! தங்களது பணிவிடையிலேயே போகிறேன்!

[கொலு அறையுள் மறைகிறாள்]

உரு :-(காலை நீட்டிக்கொண்டு சோம்பல் முறிக்கையில்) சாமியாரே...எவ்வளவு கேட்பதாக முடிவு கடைசியில்—சீ ! (காற்சட்டையிலிருந்து உதறி எதையோ தள்ளி) அடடா! பூச்சி யிது!...பாருங்கள் இதை!—பறந்து உங்கள்மேல்!

துரை:—(பதை பதைத்து எழுந்து) ஐயையோ, எடுத்தெறி—விஷமோ என்னவோ?

உரு:—இதோ—நான் பயப்படவில்லை (நசுக்கிக் காட்டுகிறான்) பார்-இதற்கா பயம் சாமியாரே! (சிரிக்கிறான்).



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[436-வது பக்கத் தொடர்ச்சி]

தயரதன் மதியுடன் மயங்கினர் புலவர்.

கைகேசியைத் தன் தாரமல்லளென வெறுத்தும் பரதனைத் தன் மைந்தனல்லனென மறுத்தும் வைத தயரதனது வன்சொற்களுக் காற்றுளாகிய அவ் வாற்றல்சால் கோசலை,

தள்ளா நிலைசான் மெய்ம்மை
  தழுவா வழுவா வகைநின்
றெள்ளா நிலைகூர் பெருமைக்
  கிழிவா மென்றா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான்
  மகன்மேன் மெலியின் னுலகங்
கொள்ளா தன்றோ வென்றாள்
  கணவன் குறையக் குறைவாள்

[கணவன் குறையத் தானும் குறையுங் கற்புடையவளாதலின், "வலிமையுடையவனே, விலக்கக்கூடாத நிலைமையால் மேன்மை வாய்ந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, அதனின்று வழுவாதபடி நின்று, ஒருவரையும் பழிக்காதிருப்பாயாக; அவ்வாறு பழித்தல் உனது பெருமைக்கு இழிவாகும். ஆதலால் ஒன்றும் பேசாதிருப்பாயாக; மகன்மீதுள்ள அன்பினால் நீ இவ்வாறு தகவின்றித் தளர்ந்தால் மேலோர் ஒவ்வமாட்டார் அன்றோ" என்றாள்.]

அக்கினி சாக்ஷியாய் நல்வாழ்க்கைக் குடன்பட்ட மனைவிக்கு இதுவேயன்றோ அழகு. "உரவோய், மெய்ம்மைவழுவிய பழிபடுமொழிகள் நின் வாய்வழியிழியவேண்டா, பேசற்க" என்றவள் பரிவுடன்வலித்தலும், இச்சொற்கள் சுட்டிய செம்மைநெறி திறம்பா முறைமையின் மேன்மையை மனத்துட்கொண்டான். குலமாது இவள் கற்பித்த பாடம் நாயகற்கு நலமிகப் பயந்தது. குறைந்தழியுந்தறுவாயில் நின்ற தயரதன் கோசலையின் உரையால் மறுபடி உயரலானான் என்பதைக் கம்பர்,

உணர்வா னனையா னுரையா
  லுயர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமே வனமே
  போவா னேயா மென்னா
இணரார் தருதா ரரச
  னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான்
  தோன்றா றோன்றா யென்றான்

[பூங்கொத்துக்கள் அமைந்த மாலையை அணிந்த தயரதன், அவன் உரையால் உணர்வுபெற்று உயர்ந்தவனாயினன். (ஆகி) கீர்த்திபொருந்திய இராமன், பூமியைச் சேராமல் காட்டிற்கே செல்பவனாவான் என்ற வருத்தத்தால் சோர்வானாகி, "தீவினையுடைய எனது துணைவனே, நீ இப்பொழுது எனக்குத் துணைவர மாட்டாயோ" என்றும், "மைந்தனே, என்முன் தோன்றமாட்டாயோ" என்றும் புலம்பினான்.]

என்ற அடுத்த செய்யுளில் ஐயமற விளக்குகின்றார். கோசலையின் உபதேசம் தயரதனுக்கு உதவியாயினவாறுதோன்ற அவன் இனி யாவரையும் அதிகம்பழித்தலின்றித் தன்னுடைய தீவினையையே நினைத்து நொந்தனனாய், இச்செய்யுள்முதல் பதினொரு கவிகளி[illegible] புலம்பலுறுகின்ற செம்மை தெரிந்துணர்தற் [illegible]

கண்ணுந் நீரா யுயிரும்
  மொழுகக் கழியா நின்றே
னெண்ணுந் நீர்நான் மறையோ
  ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணுந் நீராய் வந்த
  புனலை மகனே வினையேற்
குண்ணுந் நீரா யுதவி
  யுயர்கா னடைவா யென்றான்.

[மகனே, என் கண்ணும் உயிரும் நீராய் ஒழுக நான் சாகும் நிலையில் இருக்கின்றேன். மதித்தற்குரிய தன்மை வாய்ந்த நான்கு வேதங்களையும் கற்ற அந்தணர் (உன் பட்டாபிஷேகச் சடங்கில்) ஓமாக்கினிக்குமுன் உன்மேல் சொரிய அபிஷேக நீராய்க் கொண்டுவந்திருக்கின்ற கங்கை முதலிய புண்ணிய நதிகளின் சலத்தை, சாகுந் தறுவாயிலிருக்கும் தீவினையுடைய எனக்கு மரணதாகத்திற்குக் கொடுக்கும் நீராய் வாயில் ஊற்றிப் பின் உயர்ந்த காட்டை அடைவாயாக என்றான்.]

இராமனுக்குரிய சிறப்பினையும் அடைந்த சிறுமையையும் எண்ணி அன்னதற்குக் காரணமென்று மற்றவரைப் பழித்தலின்றித் தன்னையே நொந்தவனாய்,

படைமா ணரசைப் பலகான்
  மழுவா ளதனா லெறிவான்
மிடைமா வலிதா னனையான்
  வில்லா லடுமா வல்லா
யுடையா மகுடம் புனையென்
  றுரையா வுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத்
  தந்தே னந்தோ வென்றான்

[படைவலி மிகுந்த அரசர்களை இருபத்தொருமுறை மழுவாயுதத்தினால் வெட்டுபவனும், செறிந்து மிகுந்த வலிமை என்பதன் உருவம் தானே என்னத் தக்கவனும் (அல்லது மாவலியே போன்றவனும்) ஆகிய பரசுராமனை வில்போர் செய்து வெல்ல வல்லவனே, குலமுறைபிறழாது வரும் கிரீடத்தை அணிந்துகொள் என்றுசொல்லி உடனே கொடியவனாகிய நான் பெரிய சடைமுடியைகொடுத்தேனே, ஐயோ!" என்றான். ]

வினையோன் என்றும் கொடியோன் என்றும் தன்னைப் பழித்துக்கொள்வதுமன்றி, தன்னை யிந்நிலையில் விட்டகலத் துணிந்த இராமனையுஞ் சற்றே நொந்து'

கறுத்தா யுருவும் மனமுங்
  கண்ணுங் கையுஞ் செய்யாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன்
  புரமூன் றெரித்த வொருவில்
இறுத்தாய் தமியே னென்னா
  தென்னை யிம்மூப் பிடையே
வெறுத்தா யினிநான் வாணாள்
  வேண்டேன் வேண்டேன் என்றான்

[கண்களும் கைகளும் செம்மையாயிருப்பவனே, நீ மிக்க பொறுமையைத் தாங்கி நிற்கின்றாய். சிவபிரான் முப்புரங்களை யெரித்த ஒப்பற்றவில்லை ஒடித்தாய். நான் நிர்க்கதியா யிருக்கின்றேன் என்பதை எண்ணாமல் இந்த மூ[illegible] என்னை வெறுத்துவிட்டாய் - ஆகையால் நீ [illegible] கறுத்திருப்பவன். இனி நான் [illegible] விரும்பேன் - என்றான்.]

18894

மனங் கறுத்திருத்த லென்பது இங்கு அருளின்மையைக் குறித்து நிற்கின்றது. "அரன் வில்லை இறுத்துச் சானகியை அடையப்புக்க நீ என்னைப் பிரியவேண்டாயெனின் எவ்விடையூறையும் உறத்தெறிதல் உனக்கருமையோ. அது செய்யாது பொறுமையைக் கையாளு மிது உனக்குப் பெருமையோ? என்பா லன்புளதேல் இப்பிரிவைப் பொறுத்திருப்பாயோ! கையுங் கண்ணுஞ் செம்மையா யிருக்கின்ற உனக்கு உருவம்ஒன்று கறுத்திருத்தல் போதாதோ- மனமுமா கறுத்தல் வேண்டும். அதுவும் என் விதி போலும்" என்று தன் துயரின் மிகுதியால் நிந்தனை போன்றசொற்களை இராமன்பால் செலுத்தத் தலைப்பட்டனனேனும் தயரதன் உடனே இக்கொய்ம்மையைநீக்கி இராமன்தன் திப்பியகுணங்களையே பாராட்டுவானாகி,

பொன்னின் முன்னம் மொளிரும்
பொன்னே புகழின் புகழே
மின்னின் மின்னும் வரிவிற்
குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ
யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னம் புகுவே
னுயர்வா னகம்யா னென்றான்

துயரின் வேகம் தலைக்கொண்டார் என் சொல்லார். இன்னணம் இராமனைப் பாராட்டிய அக்கோத்தந்தை மீண்டுமவன் வன்னெஞ்சனெனவே மனம் வதங்கி, மைந்தனது அன்பிலா வன்மையையும் தனது அன்பின் மென்மையையும் ஒப்பறுத்து,

நெகுதற் கொத்த நெஞ்சும்
நேயத் தாலே ஆவி
உகுதற் கொத்த உடலும்
உடையேன் உன்போல் அல்லேன்
தகுதற் கொத்த சனகன்
தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணால்
போகக் காணேன் என்றான்

"உருகவல்ல நெஞ்சையும் உயிரைத் துறக்கவல்ல உடலையும் உடைய நான் என்னைப் பிரிய இசையும் கன்னெஞ்சால் உயிர்பொறுக்கும் உன்போலவே னல்லேன்—நீ இந்நகர் நீங்குமுன் நான்மாள்வேன்காண்" என்று பதறுமளவில் பண்டேபோல் இராகவன் உயர்வையே மீண்டும் உயர்த்தி,

எற்றே பகர்வே னினியா
னென்னை யுன்னிற் பிரிய
வற்றே யுலக மெனினும்
வானே வருந்தா தெனினும்
பொற்றே ரரசே தமியேன்
புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன்
பிழையேன் பிழையே னென்றான்

[நான் இனி என்ன சொல்ல இருக்கின்றது. பொன் தேரையுடைய அரசே, தனிமையுற்ற என்னுடைய புகழும் உயிரும் போன்றவனே, உன்னைப் பெற்ற யானே உன்னுடைய அருமையை அறிவேன்; ஆதலின், என்னை விட்டு நீ பிரிவதைக்கண்டும் இவ்வுலகத்தார் பொறுக்கவல்லவராயினும், வானுலகத்தவர் வருந்தாதிருக்க வல்லராயினும், நானோ பிழைக்கமாட்டேன்பிழைக்கமாட்டேன்—என்றான்]

அன்பினது ஆர்வத்தால் தயரதன் இராமனுக்குத் தான் தந்தையென்னும் நினைவுநீத்துத் தாயென்றே மயங்க நேர்ந்தனன்போலும். "பெற்றேன் அருமை அறிவேன்" என்பது உலக இயலில் தந்தைக்குரிய வாசகமன்று. இந்தமயக்கத்திற்கு மைந்தனது மழலைச் சொற்களும் ஒருவாறு உடன்பட்டிருத்தல் வேண்டும். தானே தயரதனாக மெய்யே மாறிப் புலம்பலுற்ற கோழியர்கோன் குடைக் குலசேகரன் இராமனது, "அம்மாவென் றுகந்தழைக்கும் ஆர்வச்சொல் கேளாதே.........இழிதகையேன் இருக்கின்றேனே" என்று இயம்பியதினின்று, இராமன் தன் தந்தையை 'அம்மா' என அழைக்கும் வழக்கமிருந்ததென நினைக்கலாம். பக்திப் பெருக்கினால் பரவசமாகியவக் குலசேகரப் பெருமாளது மனச்செவியில் இராமன் தன்னை 'அம்மா' வென்று அழைத்தகுரல் கேட்டது பொய்யன்றென்ன நாட்டுவான்போல் மெய்யாய தயரதன் இங்குப் 'பெற்றேன் அருமை அறிவேன்' என்று பத்துத் திங்கள் வயிறுசுமந்து உயிர்த்தவொரு தாயேபோல் பேசலுற்றான். தன்னையறியாமலே தன் பாத்திரங்களின் மயக்கத்தைத்தானேற்று விவகரிக்கும் கலைஞர் கம்பராதலால், இவரும் ஒருபோது தயரதனை இராமனுக்குத் தாய்தா னென்றே கருதித்தான், "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற குறளிற்கு எடுத்துக்காட்டாக, மந்திரத் தமர்ந்தவன்று இராமனது பெருமையை வசிட்டன் புகழ்ந்துபேசியவளவில், தயரதன்,

மற்றவன் சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடிக்குமப் பெருவில்
இற்ற அன்றினும் எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்.

என்று கூறியிருத்தல் வேண்டும். அக்குறளின் சொற்கள் இப்பாசுரத்துள் பெய்யப்பெற் றிருக்கின்றன வென்பதற் கையமில்லை. ஆதலால், அன்பினால் தாய் ஒப்பதுமாத்திரமன்றித் தாயே ஆகியும் விடலாம் என்பதைக் குலசேகரப்பெருமாள், இராமனை அழைத்த முறையிலும், கம்பர்பிரான், தயரதன் உரைத்த வகையிலும், உணர்த்திவைக்கின்றனர். மணக்கோலத் தெழில்பூண்ட இலக்கணையையும் சீதையையும் நோக்கிய அவ்வவர்பாங்கிமார் காமத்தால்பால்மாறுடிப்பேதுற்றாரென்னின், தந்தையுந் தனையனும் கழிபேரன்பினால் உடன்ஒக்கச் சிறிது, பிதாவோ அன்னையேதானோ என்று மயங்குமித் தூயதோர் மாயம், நம்மனோர் உள்ளத்தைக் கவர்ந்துபோய் அப்புலவர் பெருமக்கள்தம் கலைச்சிறப்பின் நினைப்பிற் சிறைவைப்பதும் வியப்பாமோ. கம்பருக்கும் கோழியர்கோனுக்கும் இடையே இச்செவ்வியிலோர் அரிய பரிவர்த்தனையும் நிகழ்கின்றது. இராமனைப்பெற்ற அருமையை இங்குத் தாயாய் அறிந்த தன்மைக்கிணங்கக் குலசேகரர் அவ்வருமையை அளந்துகாட்டுவார்போல், "நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன் ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே" என்று வேண்டுகின்றார்.

கோசலையின் நன்மொழி யுணர்ந்திணங்கிய தயரதன் கைகேசியைப் பழிக்காது இதுவரையில் தன் நாவைக் காத்தானெனினும் இவ்வரிய நிலையாற் றளர்ந்திருந்த அவனது மனஆற்றல் முற்றிலும் அம்முறையைக் கடைபிடிக்க ஏற்றதாயில்லாது,



அள்ளற் பள்ளப் புனல்சூ
ழகன்மா நிலமும் மரசும்
கொள்ளக் குறையா நிதியின்
குவையும் முதலா மெவையுங்
கள்ளக் கைகே சிக்கே
யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் னுயிரை
மாய்க்கும் மாய்க்கும் மென்றான்

இராமனது வள்ளற்றனத்தின் ஒப்பரிய மேன்மையை மதிக்கலுற்ற மன்னவன் மனத்தின்கண் கைகேயியின் கள்ளத்தனத்தின் செப்பரிய தாழ்மையும் தோன்றலாயது இயற்கையே யாதலின் அவன் வாய்வழுவி இச்சொல் வந்ததெனக் கொள்ளலாம். பின்னும்,

கேட்டே யிருந்தேன் எனினும்
கிளர்வான் இன்றே அடைய
மாட்டேன் ஆகில் அன்றோ
வன்கண் என்கண் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக்
கைகே சியையுங் கண்டிந்
நாட்டே உறைவேன் என்றால்
நன்றென் தன்மை என்றான்

[நீ காட்டிற்குச் சென்றாய் என்பதைக் கேட்டவுடனே உயிர் விடாமல் இன்னும் இருக்கிறேனானாலும், இன்றைய பொழுது கழிவதன்முன், விளங்குகின்ற விண்ணுலகம் நான் சேரமாட்டாதவனானாலன்றோ, மைந்தா, என்னிடத்தில் இரக்கமில்லாக் கொடுமை இருக்கின்றதென்று நீ எண்ணவேண்டும். நீயோ காட்டில் வசிப்பவனாவாய், உன்னைக் காண்பதற்கில்லையே என்னும் வருத்தத்தால் நான் உயிர்விடாது பொறுத்தாலுங்கூட, இக் கைகேயியின் முகத்தை, இந்நாட்டில் யான் தங்கினால், காணவேண்டியிருக்குமே என்பதற்காகிலும் என்னை மாய்த்துக்கொள்ளேனாகில், என் தன்மை மிக்க அழகு போ—என்றான்.]

இதனிலும் தயரதன் தன் வன்னெஞ்சைப் பழிப்பதுடன் கைகேசியையும் அப்பழியினுள் இழுத்துக் கொள்ள நேர்ந்தனன் இனி,

மெய்யார் தவமே செய்துன்
மிடன்மார் பரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னும்
நிலமா தென்னுந் திருவும்
உய்யா ருய்யார் கெடுவே
னுன்னைப் பிரியின் வினையேன்
ஐயா கைகே சியைநே
ராகே னேநா னென்றான்

[உண்மையான தவத்தைச் செய்து உன் வலிமைபொருந்திய மார்பை அருமையாய்ச் சேரப்பெற்ற திருமகளென்னும் மனைவியும் நிலமகள் என்னும் மனைவியும் இனிப் பிழைக்கமாட்டார். தீவினையுடைய நானும் உன்னைப் பிரிந்து அழிவேன். அவ்வாறு அழியேனெனில், மைந்தா, நானும் கைகேசிக்கே சமானமானவன் ஆகமாட்டேனோ—என்றான்.]

வசையிற் றாழ்ந்தது இதனிலோ வேறில்லை. கைகேசிக்கு அடைமொழிகள் ஏதேனும் கொடுத்திருப்பானாயின் அவை அவ்வசையின் ஆழத்தைத் தூர்த்திருக்கும். தயரதன் வாயில் அப்பெயரே தனித்துநின்று பழிச்சொல்லிற்கோர் எல்லையாயிற்று. அக்கைகேசிக்கு நேராவதிலுங் கீழ்மை தயரதன் வேறுகண்டிலன். கற்பின்மிக்க கோசலை, இவ் வன்சொற்கள் மீண்டும் வரக் கேட்டுத் தன் கணவன்றன் பெருமையைக் குறித்துக் கருத்தழிந்திருப்பாளேனும் அவனது மூப்பிற் கிது அடுக்கும் என அமைதியுங் கண்டிருப்பாள். இம்முதுமை வந்து தளர்த்தியதில்லையேல் பெருந்தன்மையில் இன்று கோசலையையே நேராகானோ நம் தயரதன்.

# யாப்பிலக்கணம்

## தொடை—இயைபு.

[413-வது பக்கத் தொடர்ச்சி]

சீரின் முதலெழுத்து ஒன்றிவந்தால் மோனைத் தொடையும், இரண்டா மெழுத்து ஒன்றிவந்தால் எதுகைத் தொடையும், ஆகுமெனக் கண்டோம். இவையிரண்டும் எழுத்தையே பற்றியவை. மூன்றாவதாகச் சொன்ன முரண்தொடை எழுத்தைப் பற்றாமல் சொல்லையும் பொருளையும் பற்றியது. இனி இயைபுத் தொடை ஆமாறு காண்போம்.

இயைபுத்தொடை, மோனையையும் எதுகையையும் போல் எழுத்தைப்பற்றியும், முரண்தொடையைப் போல் சொல்லைப்பற்றியும் இருவிதத்திலும் அமையும். ஆனால் முக்கியமான வித்தியாசமுளது. பல அடிகளின் முதல் எழுத்துக்களேனும், அல்லது ஒரு அடியின் முதலெழுத்தோடு அவ்வடியிலுள்ள வேறுசீரின் முதலெழுத்து ஒன்றுவது மோனை. இயைபுத்தொடையோ, அடிகளிலும் சீர்களிலும் உள்ள இறுதி எழுத்தைப் பொருந்தியது; அவ்விறுதிஎழுத்து ஒன்றி வருமாயின் அது இயைபுத்தொடை. இறுதி எழுத்து மாத்திரமேயன்றி இறுதிச் சொல்லே ஒன்றி வரினும் வரலாம். அதுவும் இயைபுத்தொடையே.

முத்தணி யணிவாரும் மணியணி முனிவாரும்
பத்தியி னிமிர்செம்பொற் பலகலன் மகிழ்வாரும்
தொத்துறு தொழின்மாலை சுரிகுழ லணிவாரும்
சித்திர நிரைதோயுஞ் செந்துகில் புனைவாரும்

இதனில் அடிதோறும் ஈற்றுச்சீரின் ஈற்றெழுத்து, ம் என்பது ஒன்றிவந்திருப்பதால் இது இயைபுத்தொடை. அல்லது 'வாரும்' என்ற மூன்றெழுத்தும் ஒன்றிய இயைபுத்தொடை என்னினும் பிழையில்லை.

என்னிது கொணர்கென வியம்பின னென்பார்
மன்னவ ருளர்கொலோ மதிகெட்டா ரென்பார்
முன்னையூழ் வினையினன் முடிக்கிலா னென்பார்
கன்னியு மிச்சிலை காணுமோ வென்பார்.

இச் செய்யுளின் நான்கு அடிகளிலும் 'என்பார்' என்ற சொல்லே ஈற்றில் இருப்பதால், இதுவும் இயைபுத் தொடையே.

இப்படி அடிதோறும் ஈற்றிலுள்ள எழுத்தேனும் சொல்லேனும் ஒன்றிவருவதன்றி ஓரடியினுள்ளேயும் ஒன்றி வந்து இயைபுத்தொடை அமையலாம்.

பவள உலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய

இந்தச் செய்யுளின் கடையடியின் ஈற்றிலுள்ள 'கொடிய' என்னுஞ் சொல்லே அதன் முன்னும் வந்திருத்தலால் இது இயைபுத்தொடை. இயைபுத் தொடையாவதற்கு ஈற்றுச்சொல்லோடு ஒன்றிவருஞ் சொல் அதற் கயலிலேயே முன்காட்டிய உதாரணத்தில் நிற்பதுபோல் நிற்கவேண்டுமென்ற நியதியில்லை. அந்த அடியின் எந்தச் சீராய் அமைந்திருந்தாலும் போதும்.

அகிலி டும்புகை யட்டிலி டும்புகை
நகலி ஞலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முழங்கின வெங்கணும்

இந்தச் செய்யுளின் முதலடியின் ஈற்றிலுள்ள 'டும்புகை' என்பது அதற்கு ஒரு சீர் விட்டு முன் சீரில் ஒன்றி வந்திருப்பினும் இயைபுத் தொடையே.

இப்படியே ஓரடியின் ஈற்று எழுத்து, அவ்வடியிலேயே அதன்முன் சில சீர்களின் ஈற்றெழுத்தோடு ஒன்றி இயைபுத்தொடை ஆகலாம்.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்
கற்பித்தானோ...... [கத்தான்

என்னுமிதனில், முதலடியின் ஈற்றிலுள்ள, னகர மெய் மற்றச் சீர்களின் ஈற்றிலுள்ள னகரமெய்யோடு ஒன்றி வருவதால் இயைபுத்தொடை. இவ்வுதாரணத்திற்போல் எல்லாச் சீர்களின் ஈறும் ஒன்றி வரவேண்டுமென்னும் அவசியமில்லை.

மொய்த்துடன் தவழு முகிலே பொழிலே

என்னு மிவ்வடியில், ஈற்றிலுள்ள லே என்னு மெழுத்தோடு அதன் முன்சீரின் ஈற்றிலுள்ள லே காரம் மாத்திரம் ஒன்றி இயைபுத் தொடையாயிற்று

அடியின் முதலெழுத்தைப்பற்றி மோனை அமையும், ஈற்றெழுத்தைப்பற்றி அமைவது இயைபு.

இயைபுத் தொடை அமைகின்ற வகைபற்றி நான்கு விதப்படும் :—

1. ஒரு அடியின் ஈற்றெழுத்தோடு மற்ற அடிகளின் ஈற்றெழுத்து ஒன்றி யிருத்தல்.
2. ஒரு அடியின் ஈற்றெழுத்தோடு அவ்வடியிலுள்ள சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றியிருத்தல்.
3. ஒரு அடியின் ஈற்றுச் சொல்லோடு மற்ற அடிகளின் ஈற்றுச் சொல் ஒன்றி யிருத்தல்.
4. ஒரு அடியின் ஈற்றுச் சொல்லோடு ஒன்றிய சொற்கள் அவ்வடியின் சீர்களிலே வருதல்.

இப்படிச் சொற்களால் ஒன்றிவருகின்ற இயைபுத் தொடைக்கும் அணிகளில் ஒன்றாகிய பின்வருநிலையணிக்கும் ஒருவகையில் ஒற்றுமை இருக்கின்ற தேனும் வேற்றுமை அதிகம் உளது. இப் பின்வருநிலையணியின் இலக்கணத்தை முன் (3-வது வால்யூம் 131-வது பக்கம்)விரிவாக எழுதியிருக்கின்றோம். அதன்படி,

i. செய்யுளில் வந்த சொல்லொன்று மீண்டும் அப்பொருளிலேயே சிலமுறை வருதல் — சொற்பொருள் பின்வருநிலையணி
ii. ஒருமுறை வந்தசொல், (ஒரே பொருளில் அல்லாமல்) வேறு வேறு பொருளில் பின்வருவது— சொல் பின் வருநிலையணி.
iii. ஒரே பொருளுடைய வேறு வேறு சொற்கள் வருதல்—பொருள் பின் வருநிலையணி.
iv. ஒரே பொருளுடைய வேறு வேறு சொற்கள் உவமை வாயிலாக வேறுவேறு வஸ்துக்களை அடுத்து நிற்றல்—உவமைப்பொருட் பின்வருநிலையணி.

எனப் பின் வருநிலையணி நான்கு வகைப்படுவது தெரியவரும். சற்றுமுன் இங்கு, இயைபுத்தொடையும் நான்குவகையில் அமையக்கூடும் என்பதையுங் கண்டோம். இவைகளில், பின் இரண்டு வகைகளில் அமைகின்ற இயைபுத்தொடை, முதல் இரண்டு வகைகளில் அமைகின்ற பின்வருநிலையணியும் ஆகும். எனினும்,முதலிரண்டுவகைகளைச்சேர்ந்த பின்வருநிலையணியெல்லாம், பின்இரண்டுவகை இயைபுத்தொடை எப்பொழுதும் ஆகும் என்று எண்ணவேண்டா. ஏனெனில், பின்வருநிலையணி யாவதற்குச் சொற்கள் செய்யுளடிகளில் எவ்விடத்திலேனும் இருக்கலாம்; இயைபுத்தொடைக்கோ ஒன்றிவரும் சொற்களில் ஒன்று அடியின் ஈறாக இருக்கவேண்டு மென்பது அவசியம். மேலும் அச்சொற்களும் புணர்ச்சி முதலியவைகளால் எழுத்துக்கள் திரியாமல் ஒரே உருவத்தில் இருந்தாற்றான் இயைபுத்தொடையாகும்.

நீரிடை யுறங்குஞ் சங்க
நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு
தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை
துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம்
பொழிலிடை யுறங்குந் தோகை

இதனில், உறங்கும் என்னுஞ் சொற்கள் பலஇடங்களில் வந்திருக்கின்றன. ஆயினும் அடியின் கடையில் ஒன்றும் வரவில்லை. ஆதலின் இது சொற்பொருள் பின்வருநிலைஅணி யேயன்றி இச்செய்யுளில் இயைபுத்தொடையில்லை.

கடவுளைக் காணப் பெற்றேன்
கைதொழு தேத்தப் பெற்றேன்
மடமைகள் தீரப் பெற்றேன்
மம்மரோ யறக்கப் பெற்றேன்
படைமந ஞேடப் பெற்றேன்
பாவங்கள் விலகப் பெற்றேன்
கடைவழிக் கதியும் பெற்றேன்
பேரின்பம் பெற்றேன் பெற்றேன்.

இச்செய்யுளில், அடிதோறும் 'பெற்றேன்' என்ற சொல் ஒன்றிமுடிவதால் இயைபுத்தொடை யமைந்



திருக்கின்றது. அன்றியும், அவ்வொவ்வோரடியிலும் ஈற்றிலுள்ள 'பெற்றேன்' என்ற சொல்லோடு ஒன்றி அவ்வடியிலேயும் 'பெற்றேன்' என்ற சொல் வேறோர் சீராக இருப்பதும் இயைபுத்தொடையே. இனி, 'பெற்றேன்' என்ற சொல் செய்யுளின் பல விடங்களில் (ஒரே பொருளில் வந்திருப்பதால்) இது சொற்பொருட் பின்வருநிலை யணியுமாகும்.

(1) ஆலைவாய்க் கரும்பின் றேனு
மரிதலைப் பாளைத் தேனும்
(2) சோலைவாய்க் கனியின் றேனுந்
தொடையிழி யிறாலின் றேனு

என்னுமிதனில், இரண்டடியும் இறுவது 'தேனும்' என்ற சொல்லாலேனும், ஒன்று 'தேனும்' என்றும் மற்றொன்று 'றேனு' என்றும் புணர்ச்சி விகாரத்தால் வேறுபட்டு நிற்றலால் அது இயைபுத் தொடையாகாது. இனி, ஒவ்வோரடியிலும் தேனும் என்ற சொல் ஈற்றுச் சொல்லாவதோடு வேறொரு சீருமாயினும் அவைகளும், றேனு—தேனும், என்று முதலடியும், றேனுந்—றேனு என்று இரண்டாமடியிலும் விகாரவேறுபா டுற்றிருப்பதால் அவ்வவ்வடியிலும் இயைபுத் தொடையில்லை. இச்செய்யுளில் இருப்பது சொற்பொருட் பின்வரு நிலையணி மாத்திரந்தான்.

அடியின் ஈறு நின்ற எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றித் தொடுப்பது இயைபுத் தொடை எனக் கொள்க. இனி, வருக்க எழுத்துக்களாலும் இன எழுத்துக்களாலும், கிளை எழுத்துக்களாலும் மோனையமைவதுபோல் இயைபுத் தொடையும் அமையலாமோ ஆகாதோ வென்று இலக்கண நூல்களிலிருந்து அறியுமாறில்லை. ஆகலாமென்றே நாம் நினைக்கின்றோம்.

ஜோஸப் அடிஸன்

எழுதிய

# விசிறி

('Fans' By Joseph Addison)

அடியில் காணும் கடிதம், தளுக்குமினுக்குக் காரிகளைப் பரிகசிக்கவென்று எழுதப்படலாயதோ, அல்லது பெண்கள் தேர்ச்சிபெறும் துறைகள் இவையெனக் காட்டத்தானோ என்று எனக்குத் தெரிய இயலவில்லையாதலால், இக்கடிதத்தை எத்தலைப்பின் கீழ்ப் பிரசுரிப்பதென்று தீர்மானிக்க முடியவில்லை. ஆதலால் 'விசிறி' என்ற தலைப்பின் கீழ்விஷயத்தைப் பொதுஜனங்களுக்கு அறிவித்துவிடுவதேபோதும் என்று நினைக்கின்றேன். அக்கடிதத்தைப் படிப்பவர் அதன் கருத்தைத் தாமே அறியலாமாதலால், முன்னுரையும், முடிவுரையும் வேண்டியதில்லை.

கடிதம் வருமாறு:—

"ஸ்பெக்டேட்டர்" பத்திரிகையின் ஆசிரியரவர்களுக்கு,

ஐயா,

புருடர்களுக்கு ஆயுதமாய் வாள் அமைவதுபோல் அமைகின்றது பெண்களுக்கு விசிறி. சிற்சில சமயங்களில், ஆடவர்தம் ஆயுதமாகிய கைவாளினும் மிகப் பெரிய காரியங்களை முடித்துவிடும் பெற்றியது பெண்கள் கை விசிறி. இவ் விசிறிப்பிரயோகக் கலையைப் பயிற்றுவிக்கும்பொருட்டு நான் ஒரு கல்லூரியை நிறுவியுள்ளேன். இதுபொழுது, அரசியர் மாளிகைகளில் கொண்டாடப்பெறுவதும், குலுக்குமினுக்குந் தளுக்குச் சிங்காரிகளால் கையாளப்பெறுவதுமான எல்லா முறையையும் இக்கல்லூரியில் எளிதில் பழகுவதற்கு வசதியுண்டு. எனது கல்லூரியில் பயில்வோர்க்கு ஒரு நாளில் இருமுறை விசிறிப் பிரயோகப்பயிற்சி செய்விக்கப்படும். மாணவிகள் எனது பயிற்சி மண்டபத்தில் கூடுவர். அவர்களை 'விசிறியைக் கைக்கொள்ளுங்கள், பிரியுங்கள், பிரயோகம் செய்யுங்கள், கீழே போடுங்கள், மறுபடியும் எடுத்துக்கொள்ளுங்கள், சலசலவென ஒலிக்கச்செய்யுங்கள்' என்பனபோன்ற சாதாரண சொற்களேகொண்டு பழக்கிவைப்பேன். சிறிதே அறிவுடைய பெண்களும் ஊக்கத்துடன் பயின்று வருவாராயின் ஆறுமாதகால அளவில் உயிரற்ற அவ்விசிறியின் உதவியால், பிறர்கண்டு வியக்க வல்ல, எல்லா நலங்களையும் எய்தியவர்களாகலாம்.

எனது வாசகர்கள் யாவரும் இப்பயிற்சியின் பயனைப்பற்றி நேராக எளிதில் தாமே தேர்ந்து கொள்ளும்படி எனது முறைகளை இங்கே சற்று விளக்குவேன். எனது மாணவியர்படை, பயிற்சிச்சாலையில் ஒன்று சேர்ந்தவுடன் 'கைக்கொள்ளுங்கள்' என்று நான் சொல்ல அவர் தம் கையில் விசிறியைப் பற்றுவர். பற்றியதும், சிரித்தமுகத்துடன் என்னெதிர் நோக்கி விசிறியை ஆட்டிப் பின், தனது வலதுபக்கமிருக்கும் பெண்ணின்தோளில் விசிறியால் தட்டி, தட்டியதால் திரும்புவாளது இதழை விசிறியின் நுனியால் அமக்குவாள். பிறகு கையைக் கீழே தொங்கவிட்டு நிற்பாள். இவ்வளவும் விசிறியைப் பிரிக்காது செய்யவேண்டும். இதுதான் விசிறிப் பிரயோகத்தில் முதற்பாடம். இதை ஒருவாரத்தில் கற்கலாம்.

இரண்டாவதாக விசிறியைப் பிரிக்கும் கலை கற்பிக்கப்படும். இது மிகச் சிறந்தது. எனினுஞ் சிறிது கடினமானது. விசிறியைப் பிரிக்கும்போதே பார்ப்பவரைக் கவர்ந்துகொள்ளும் சாகஸமும், விசிறியின் அசைவும், ஓசை இன்பமும், மெள்ள விரியும் விசிறியினிடமுள்ள சித்தரங்கள் வெளிப்படும் நயமும் வேண்டும். இதுதான் விசிறிக்கலைகளில் மிக உயர்ந்த கலை. இதுதான் பார்ப்பவருக்கு மகிழ்ச்சி மிகத் தாவல்லது. ஊக்கத்துடன் முயல்பவர்களால் ஒரு மாதகால அளவில் இப்பாடம் கற்கவியலும்.

பிறகு, 'பிரயோகம் செய்யுங்கள்' என்று நான் கூறுவேன். இம்மொழி கேட்டதும், விரைவில் ஆடி-

யசையும் விசிறியினுள் காற்றுப்புகும்படி, அவர் அக்கலையை இயற்றும் ஆற்றலால் ஓசையொன்று பிறக்கும். அவ்வோசை தூரத்தில் இருப்பவர்களுக்கும் கேட்கக்கூடியதாக விருக்கும். இதுவும் கஷ்டமான கலைதான். ஒரே அறையிலிருப்பவருக்கும் காதில் விழாதபடியே தங்கள் விசிறி பிரிகின்றதே என்று மனஞ் சோர்ந்திருந்த மாதர் பலர் என்னிடம் இக்கலையில் தேர்ச்சிபெற வந்தனர். இப்பொழுது அவர்கள் பிரயோகம் செய்வார்களாயின் கைத்துப்பாக்கி சுட்டது போன்ற வோர் ஓசையை இவ்விசிறியின் வேகத்தில் கேட்கலாம். விசிறியின் எப்பாகத்தை எவ்விதம் கையாண்டால் இவ்வோசை நன்றாக எழும் என்பது தெரியாமல் சிலர் சிற்சிலசமயம் விழிக்க நேர்கின்றது. இக்குறை இல்லாதுபோகும்படி செய்வதற்காக நான் ஒரு நூதன விசிறி கண்டுபிடித்திருக்கிறேன். அதனில், காற்றுக் கொள்ளக்கூடிய ஒரு குழாய் உண்டு. இதனால் அதிகப் பயிற்சிஇல்லாத பதினாறு வயதுப் பெண்ணும், நல்ல பயிற்சிபெற்ற ஐம்பதுவயது மாதேபோல் ஓசைநலம் பொலியப் பிரயோகிக்க இயலும்.

இக்கலைக்குப்பின் 'கீழே போடல்' என்னும் கலையைக் கற்பிக்க 'கீழே போடுங்கள்' என்பேன். இக்கலை பெண்களுக்கு மிக அவசியம். சீட்டாடவேண்டியோ, அல்லது, கீழே விழுந்த கூந்தல்ஊசியை எடுத்துத் தம் கூந்தலைத் திருத்திக்கொள்ளவோ, இதுபோன்ற வேறு முக்கியமான காரியங்களைக் கவனிக்கவோ, விசிறியைக் கீழே போட நேரிடுமல்லவா! நயம் கெடாது அவ்விசிறியை மூடிக் கீழேபோடக் கற்பிக்கும் இக்கலையை இரண்டு தினங்களில் கற்றுவிடலாம்.

இக்கலையைப் பயிலுங்கால், எனது மாணவிப் படையை, விசிறியைக் கீழேபோடச் சொன்னபிறகு சிறிதுநேரம் அவர்களை உலாவும்படி செய்வேன். அவர்களும் உலாவிக் கொண்டிருப்பார். இப்படி நான் செய்வது அவர்கள் அடுத்த கலையைக் கற்க உபயோகமாகும் பொருட்டே. நண்பர்களைக்காணச்சென்ற சீமாட்டிகள் சிறிதுநேரம் தங்கியபின் விரைந்து தம் கெடியாரத்தை எடுத்துப் பார்ப்பதுபோல், 'மீண்டு மெடுங்கள்' என்று நான் கூறியவுடன் அவசரமாய் எல்லோரும் விசிறியைக் கைப்பற்றி அவரவர் இடத்தில் அமைவர். இப்படி அவர் எடுப்பது பார்ப்பவர் மனத்தைக் களிக்கச்செய்யும் தன்மையதா யிருக்கவேண்டும். இக்கலை கடினமான கலையன்றெனினும், இதனில் நல்ல தேர்ச்சிபெறப் புத்திசாலித்தனம் வேண்டும்.

அடுத்தபடியான கலையே கடைசிக்கலை. இது "விசிறியின் சிறகொலி" என்னப்படும். பறவைகள் உயரக் கிளம்பி எழுந்து பறக்காமல் சிறகுகளைமாத்திரம் அலைப்பதுபோல் விசிறியினால் செய்து, அவ்வலைப்பையும் ஓசையையும் எழுப்பவேண்டும். இச்சிறகொலிக் கலையில் பல பாகுபாடுகள் உண்டு. கோப அசைவு, அடக்க அசைவு, அச்ச அசைவு, குழப்ப அசைவு, சந்தேக அசைவு, காம அசைவு, என்பவைகளே அப்பாகுபாடுகள். இவைகளோடு சார்புள்ள பல இயக்கங்களுமுண்டு. இயற்றுபவர் மானோபாவத்திற்கும், ஆற்றலிற்கும் ஏற்றபடி அவை சுவைநயம் பெறும். உள்ளத்து எண்ணமெல்லாவற்றையும் கைக்கொண்ட விசிறியினுள் இயக்கிக்காட்டலாம். அவை சொல்வதற்குரியவை அல்ல. இக்கலையில் திறமைபெற்ற ஒருத்தியின் கைவிசிறியிலிருந்து, அவள் கோபமாயிருக்கின்றாளோ, சிரிக்கின்றாளோ, அல்லது நாணுகின்றாளோ என்று நான் கூறிவிடுவேன்.

இனி, என் கடிதத்தை முடிக்குமுன், எனது அனுபவத்தினின்று பிறந்த முடிவுகளைக் கொண்டு ஒரு நூல் எழுதியிருக்கின்றேன் என்பதைக் கூறலாம். விசிறியின் போக்கு, என்பது அதற்குத் தலைப்பு. இதுபோது உபயோகமாயிருக்குமென நீங்கள் கருதுவீர்களாயின், அதைப் பிரசுரம்செய்ய அனுப்பி வைக்கின்றேன்.

இப்படிக்கு
விசிறிக்கலை போதகாசிரியன்

குறிப்பு:—விசிறிக்கலையை ஆடவர் பழகும்படி அவருக்கும் பயிற்சி கொடுப்பேன். பெண்களோடு இனிது பழகி அவர்களது நல்வியப்பைப் பெறுவதற்கு இது மிகவும் பிரயோசனம்.

முக்கிய கவனிப்பு:—இக்காரியத்திற்கென்று சிறந்த முறையில் விசிறிகள் செய்துள்ளேன்; குறைந்த விலைக்கு அகப்படும்.

இங்கிலாந்தில் விசித்திர விசிறியொன்று கையிற்கொண்டே மாதர்கள் நடமாடும் வழக்கத்தைப் பரிகசித்து 'அடிஸன்' என்பவர் இருநூற்றிருபது வருடங்களுக்குமுன் தன் 'ஸ்பெக்டேடர்' என்னும் பத்திரிகையில் எழுதிய இது, அந்நாட்டு வாழ்க்கையின் ஒரு பாகத்தைத் தெரிவிக்கவல்லது. இப்பொழுது, இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் இந்த விசிறிப் பைத்தியம் (கலை) குறைந்துகொண்டு வருகின்றது.

"ஆசிரியர்"


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை காஞ்சீபுரம்.





— லோத்ரா —
ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —
இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —
ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்
இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.
எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!
போஜன விதி
உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
பாலிஸிஹோல்டர் நலமே எங்கள் நோக்கம்.
பிரீமியம் மிகக்குறைவு. ஒருவிதக் குற்றமும் சொல்லமுடியாத செக்கியூரிட்டிகள். கடுமையான சிக்கனம்.
இந்தியரின் திறமுடைய மேற்பார்வை.
பாலிஸிஹோல்டர் பணம் திரும்பப்பெறும் காலம் எளிதில் கணக்குத் தீர்த்துக்கொள்ளும் வசதி.
இந்தியாமுழுதும் கிளை ஆபீஸ்கள்
பொதுஜன ஆதரவும், முன்னேற்றமும் உடையது.
பணத்திற்கு அழிவு ஒன்றும் நேராதபடி லாபமான வழியில் இன்வெஸ்டுமெண்டுகள் செய்யப்படுவது.
எனவே
நாஷனல் இன்ஷியூரென்ஸ் முன்நிற்கின்றது.
பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை:—
கஞ்சம், விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி, அனந்தபூர், கிழக்கு ஹைதராபாத் ஜில்லாக்கள் கோயமுத்தூர், நீலகிரி. விவரங்களுக்கு எழுதவும்.
113, அரமனைக்காரன் தெரு, சென்னை. T. அனந்தாசாரி, B. A. பிராஞ்ச் செக்ரடரி.

- பாரதி -
சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

| | |
|---|---|
| உள் நாடு வருட சந்தா | ரூ. 2 0 0 |
| வெளி நாடு ,, | ரூ. 2 8 0 |

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.
ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.
ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4 சுயகலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், முயலுக்கு முயல வேண்டா, நல்லோர்சடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கச் சாக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமை பார்த்பெரியாரகார், காணத்தால் வைவார்திறம், மால்வாலியோவின்மரபு மாய்க்கதில்லையோ, மானமழிந்தபின், மண்காத்து, பேயச்சில் பிள்ளையாரோ, தலைகீழ்கணக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சண்டெலி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தவிரங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், யானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்) மொழிபெயர்ப்புக்கட்டுரைகள், மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தொல்பயின்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.
கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM C.C.S.**

FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

**"KALANILAYAM"**

*VELLALA STREET,*

*Purasawalkam, MADRAS.*

இரண்டு ஸம்ஸ்கிருத மஹா காவியங்களின் மொழி பெயர்ப்பு.

## காதம்பரி

1400-வருஷங்களுக்கு முன் பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. கதை வெகு அற்புதம், வர்ணனைகள் வெகு சுவை பொருந்தியன. "காதம்பரியைப் படிக்கையில் இரவிகர் உணவையும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. தமிழ் வசன நடை மிக்க இனிது. அநேகம் வித்வான்களும் ஸ்திரிகளும் கொண்டாடுகிறார்கள். விலை ரூ. 1-8.

## மேகஸந்தேசம்

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் ஸம்ஸ்கிருத காவியத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் அழகிய வசனநடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாபவசத்தால் தன் மனைவியைவிட்டுப் பிரிந்த ஒருயக்ஷன் மனைவிக்குத் தூது அனுப்பும் அருமையான விஷயம்—மனோஹரமானது. முகவுரை முதலியவை வெகு விசேஷமானவை. 0-14-0.

இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூபா **2**. தபால் சார்ஜு பிரத்யேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், 85, வேள்ளாழத் தெரு, வேப்பேரி, மதராஸ்.

**பண்டாரம் மாந்த எண்ணை**

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உண்டாகும் மலச்சிக்கல், மாந்தம், இழுப்பு, ஜுரக்கட்டி, முதலியவைகளை ஆரம்பத்திலேயே வரவொட்டாமல் தடுத்துக் குழந்தைகளை நன்றாய்க் காப்பாற்றும் சஞ்சீவி எண்ணை.

விலை அணா **12**. எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். எக்லெக்டிக் பார்மசி & டிஸ்பென்ஸரி,

49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்

## கலாநிலய முன்னைய இதழ்கள்

**மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்**

**முதல் ஆண்டு:**—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

**இரண்டாமாண்டு:**—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

**மூன்றாமாண்டு:**—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

**தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. 10—0—0, வெளிநாடு ரூ. 11—8—0.**

**விலாசம்:—** (தபால் சார்ஜ் உள்பட.)

**கலாநிலயம், புரசைபாக்கம், சென்னை.**




## வர்த்தமானம்

கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் லண்டனில்செய்த பிரசங்கமொன்றில், இந்தியர் தங்களுக்கிடையேயுள்ளவகுப்புப் பிரச்னைகளைத்தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும்,சந்தேகத்தினால் இந்துக்களும்மகமதியர்களும் சந்துபட நெருங்காது விலகியிருத்தலால் நாட்டின்நலம் வலிவுறாதென்றும் சொல்லி, ஐரோப்பியர்களும் மகாத்மாகாந்தியைக்கண்டு பயந்துகொள்ளக்கூடாதென்றும், அவர் நியாய விரோதமாய் ஒருகாரியமும்செய்யாரென்றும், அவரிடத்தில் ஆங்கிலேயர் நம்பிக்கைகொண்டு சிநேகமுறையில் காரியங்களைநிகழ்த்துவார்களேயானால் இருபெரு நாடுகளும் நட்புவகையில் நீண்டகாலம் ஒருவருக்கொருவர் உதவியாய்க் கண்ணியத்துடன் வாழலாம் என்றும், ஐரோப்பியரது நட்பு இந்தியரது வளர்ச்சிக்கு அவசியம் என்றும், பிரிட்டிஷ்ஆட்சியால் இந்தியா அதிகப் பயனை யெய்தியுள்ளதென்றும் பேசினாரெனத் தெரிகின்றது.

***

அடுத்த சர்வகட்சி மகாநாட்டைக் குறித்துமகாத்மாகாந்தி தமது 'யங் இந்தியா பத்திரிகையில் பின்வருமாறு கூறுகிறார்:—

நம்மிடையுள்ள வகுப்புச் சண்டையை நாமே தீர்த்துக் கொண்டாலன்றி, லண்டன் செல்வதில் எனக்குச் சிறிதும் இஷ்டமில்லையென டில்லியில் சமாதானப் பேச்சு நடக்க ஆரம்பித்ததிலிருந்து நான் சொல்லிவந்திருக்கிறேன். இக்கருத்தை நான் மாற்றிக்கொள்ள இதுவரை ஒன்றும் ஏற்படக்காணோம். டில்லி ஒப்பந்தம் சம்பந்தமாக ஒருவித நெருக்கடியான நிலை இப்பொழுது இருந்து வருவது நான் இந்தியாவினின்று புறப்படுவதற்கு இன்னொரு தடையாகுமென்றுதோன்றுகிறது. இச்சமரசம் முறிவதைத் தடுக்க நான் எனது உயிரையும் தியாகம் செய்வேன். இம்முறிவைத் தடுக்கும்பொருட்டு நான் இங்கிருப்பது அவசியமென்பதை நினைக்க மிகவும் பெருமை அடைகிறேன். எனினும் லண்டனில் செப்டம்பர் மாதத்தில் நடக்கவிருக்கும் கூட்டத்திற்குச் செல்வதற்காகப் புறப்படவேண்டிய காலத்திற்குமுன் இவ்விரு இடையூறுகளும் தீர்ந்துபோமென நாம்நம்புவோம்.

***

லால்குடி சுயமரியாதை மகாநாட்டில் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியிருக்கிறது:—

"தற்காலம் இந்தியதேசத்தில் காங்கிரஸ் மகாசபையின் ஆதரவில் மகாத்மா காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்துவரும் கதர்ப் பிரசாரமும், கதர் உற்பத்தி விற்பனை வேலைகளும் நமது தேசத்தின் நாகரிக அபிவிருத்தியைத் தடைப்படுத்துவதாலும், மக்கள் வாழ்க்கையில் அவரவர் தேவைக்கு அவரவரே உழைத்து மற்றவர் கூட்டுழைப்பைக் கருதாமல் ஒவ்வொருவரும் தனித்து நிற்கவேண்டுமென்னும் பிற்போக்கான கொள்கை கதர்வேலைக்கு அடிப்படையா யிருந்து மற்ற தேசத்து மக்கள் கூட்டுழைப்பின்மூலமாகத் தொழிலபிவிருத்திசெய்து முன்னேறும் பொழுது நமது மக்களைத் தனிவாழ்வு மூலம் மிருகப்பிராயத்தை அடையும்படி செய்து வருவதாலும், யந்திரசாலைகளைப் பகைத்துத் தொழில் விவசாய முறைகளில் யந்திரவளர்ச்சியைத் தடுத்து ம[illegible]

## மதிப்புரை

### திரு அருட்பா

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை. B.A., M.L.

அவர்களது

அடக்கவிலைப் பதிப்பு.

திருவருட்திறம் வாய்ந்தவர் தாம் அதனை எய்தியவாறும் எய்தியதால் பெற்றபேறு யாதென்பதும் நம்மனோர்க்குத் தெரிவிக்கின்ற உதவியிலும் பெரியதோர் கருமம் இக்காலம் மக்கள் செய்வதற்கில்லை. திருவருட் பிரகாசவள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்கசுவாமிகள் அத்தகைய பெரியார்களிற் பெரியாராதலால் அவர் திருவாய்மலர்ந்தருளிய அமுதமொழிகள் அனைவர்க்கும் எளிதில் எய்தவல்லதா யிருக்க வேண்டுமென்பது மிகவும் அவசியம். அவ்வாறுசெய்ய உடன்பட்டு ஸ்ரீமான் பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள், ஊதியம் யாதும் வேண்டாது, சிறிதுகாலத்திற்கு முன் இராமலிங்கசுவாமிகளின் கீர்த்தனைப்பகுதியை 3 அணாவிலைக்குள் அடங்குமாறு பிழையற அச்சிட்டு உதவினார். இப்பொழுது சுவாமிகளின் வசனப்பகுதியும், 4 அணாவிலைக்கே கிடைக்கும்படி அவரால் பதிப்பிக்கப்பட்டு வெளியாயிருக்கின்றது. இப்பதிப்புக்களில், இதன்முன் அச்சேறாத பலபாகங்கள் இருப்பதுடன், மற்றவைகளும் சுவாமிகள் கையெழுத்தோடும் அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் கையெழுத்தோடும் ஒத்திட்டுப் பார்த்தவைகளாதலால், ஸ்ரீமான் பிள்ளையவர்களின் உள்ளன்போடு கூடிய முயற்சிக்குத் தமிழுலகம் மிக்க கடமைப்பட்டதா யிருத்தல் வேண்டும். மநுமுறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், விண்ணப்பங்கள், சத்திய அறிவிப்பு, என்னும் நான்கு பிரிவுகளைக்கொண்ட வசனப்பகுதியினின்று சென்ற வாரத்தலையங்கத்தில் நாம் பெயர்த்தெழுதிய சில மொழிகளைக் கண்ணுற்றவர், சுவாமிகளின் மொழியினதருமையில் தாம் மேன்மேலும் ஈடுபட அவாவுவார் என்பதற் கையமில்லை. 'இத்திரு அருட்பா' அடக்கவிலைப்பதிப்புகளை நம்முடைய வாசகர் அனைவரும் வாங்குவதால் தாம் அடைகின்ற நன்மையோடு அது மற்றப்பதிப்புக்களையும் விரைவில் பதிப்பித்து அளிக்க வேண்டும் என்னும் ஊக்கத்தையும் பிள்ளையவர்களுக்குக் கொடுத்ததாகும். ஸ்ரீமான் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, 20, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்னும் விலாசத்திற்குத் தபால் தலை யனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விலையுடன், தபாலுக்காக ஒவ்வோரணாத் தலையும் சேர்த்தனுப்பவேண்டும்.

---

பிரயாசையை அதிகப்படுத்தும் முறைகளைக் கையாளவுவதால் கதர்வேலை மனித வாழ்க்கையில் ஓய்வுக்கும் அறிவு வளர்ச்சிக்குமான நேரத்தைக் குறைப்பதாலும், இந்த மகாநாடு கதர் இயக்கத்தைக் கண்டிப்பதோடு, இந்தியாவின் துணிகளை உடுத்தவும், யந்திரங்களை வளர்க்கவும் கூட்டுத்தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும் தீவிரமாக முயலவேண்டுமென[illegible]னிக்கிறது."

18924

3C

…1, N28 KN

N35:423

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேடலாக் இனும்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்

டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு

அவர்களின்

## ஸித்தகல்ப மகரத்துஜம்

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்ருத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபகசக்தி பெறவைக்கவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட டப்பி ரூபா 10

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி
லிமிடெட், சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L.
தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

கேட்லாக் இனும்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாயக்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதர் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)